2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

சமூக சேவைகள் திணைக்களம்

செலவினத் தலைப்பு இலக்கம் :- 216

சமூக சேவைகள் திணைக்களம்

இரண்டாவது மாடி

செத்சிறிபாய - கட்டம் II

பத்தரமுல்ல.

தொலைபேசி - 0112187050

தொலைநகல் -0112186276

மின்னஞ்சல் - dirss@sltnet.lk

-dirssdss@gmail.com

இணையதளம் - www.socialservices.gov.lk

உள்ளடக்கம்

அத்தியாயம் 01 - நிறுவன விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

1.1	அறிமுகம்	3-4
1.2	நிறுவனத்தின் தொலைநோக்கு, செயற்பணி, நோக்கம்	5
1.3	பிரதான பணிகள்	6
1.4	நிறுவனக் கட்டமைப்பு	7
1.5	சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் உள்ள பிரிவுகள் மற்றும் நிறுவனங்கள்	8-19
1.6	சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் உள்ள நிதியங்கள்	19-20
1.7	வெளிநாட்டு உதவி கிடைக்கப் பெறும் கருத்திட்டங்கள் பற்றிய தகவல்கள்	20

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

2.1	அங்கவீனமுற்ற நபர்களுக்கான நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	21-33
2.2	போதைப்பொருளுக்கு அடிமையானவர்களினைப் புனர்வாழ்வளித்தல் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைக்கும் கருத்திட்டம்	34-35
2.3	அங்கவீனமுற்ற சமூகத்துக்கான தொழில் உதவி மேம்பாட்டுக்கான கருத்திட்டம்	35-36
2.4	சாதனைகள்	36
2.5	சவால்கள்	37
2.6	இலக்குகள்	37-38

அத்தியாயம் 03 - வருடத்தின் ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை

3.1	நிதிசார் செயலாற்றுகை கூற்று	39-40
3.2	நிதி நிலைமைக் கூற்று	41
3.3	காசுப் பாய்ச்சல் கூற்று	42-43
3.4	நிதிக் கூற்று	43
3.5	வருமானச் சேகரிப்பு செயலாற்றுகை	43
3.6	ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளை பயன்படுத்தும் செயலாற்றுகை	44
3.7	நி.பி. 208 இன் பிரகாரம், பிற அமைச்சுக்கள்/திணைக்களங்களின் பிரதிநிதி ஒருவராக இத் இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்	44
3.8	நிதியல்லாத சொத்துக்களினை அறிக்கையிடும் செயலாற்றுகை	44
3.9	கணக்காய்வாளர் அறிக்கை	45-54

அத்தியாயம் 04 - செயலாற்றுகை குறிகாட்டிகள்

4.1	நிறுவனத்தின் செயலாற்றுகை குறிகாட்டி (செயற்பாட்டுத் திட்ட பிரகாரம்)	55

அத்தியாயம் 05 - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளினை நிறைவேற்றும் செயலாற்றுகை

5.1	இனம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் (SDG)	56-57
5.2	**பேண்தகு அபிவிருத்தி இலக்குகளினைப் பூர்த்தி செய்வதிலுள்ள சாதனைகள் மற்றும் சவாவல்கள்**	57

அத்தியாயம் 06 - மனித வள விவரம்

6.1	ஆளணி முகாமைத்துவம்	58-60
6.2	நிறுவனத்தின் செயலாற்றுகை மீது மனித வளப் பற்றாக்குறை அல்லது மிகை தாக்கம் செலுத்தும் விதம்	60
6.3	மனித வள அபிவிருத்தி	61-65

அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை

7.1	இணக்க அறிக்கை	66-70

அத்தியாயம் 01

நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்

ஸ்ரீமத் ஐவர் ஜெனிங்க்ஸ் அவர்களின் தலைமையில் 1944 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட சமூக சேவைகள் ஆணைக்குழுவின் பரிந்துரையின் கீழ் 1948 பெப்ரவரி மாதம் 01 ஆந் திகதி சமூக சேவைகள் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது சமூக சேவைகள் விடயத்திற்குப் பொறுப்பான மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் கீழ் திணைக்களத்தின் கடமைப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுகின்றன.

ஓரங்கட்டப்பட்ட மற்றும் பாதகநிலைக்கு உட்பட்ட நாட்டின் சமூகங்களுக்கு மிகவும் சிறந்த சூழலொன்றினைக் கட்டியெழுப்பும் நோக்கில் சமூக சேவைகள் திணைக்களம் தனது உன்னத செயற்பாடுகளினை நிறைவேற்றி வருகின்றது. திணைக்களத்தின் பணிக்கூற்றினைத் தழுவி 2022 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற ஒதுக்கீடுகளுக்கு இணங்க இனங்காணப்பட்ட பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களினைத் திட்டமிட்டு அடி மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை அமுலாக்கியுள்ளது. அதன் பிரகாரம் சமூக சேவைகள் திணைக்களத்தினூடாக 2022 ஆம் ஆண்டில் இடம்பெற்ற செயற்பாடுகளுடன் தொடர்பான ஒட்டு மொத்தத் தகவல்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

விசேடமாக அங்கவீனமுள்ள சமுதாயத்தினை இலக்காகக் கொண்டு அவர்களின் சமூகப் பொருளாதாரத்தினை சிறந்தவாறு முன்னெடுப்பதற்குப் பல நிகழ்ச்சித் திட்டங்கள் இடம்பெற்றுள்ளதுடன், அதனுள், திணைக்களத்தின் அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குவதற்கான வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் யாவருக்கும் இரண்டாவது சேவையாக இல்லாத வகையில் நிறைவேற்றி வருகின்றது. விசேடமாக அங்கவீனமுற்ற இளைய சமுதாயத்தினை இலக்காகக் கொண்டு அமுலாக்கப்பட்ட நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களினூடாக வெற்றிகரமான முன்னேற்றமொன்றினை சுவீகரிப்பதற்கு திணைக்களத்திற்கு இயலுமை கிட்டியுள்ளது.

மாவட்ட மற்றும் பிரதேச செயலகப் பிரிவு ரீதியாக அங்கவீனமுற்ற சமுதாயத்திற்குத் தேவையான சேவைகளை வழங்குவதற்கு சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டம் (CBR) முறைசார் திட்டமொன்றின் பிரகாரம் திட்டமிட்டு அமுலாக்கப்பட்டுள்ளது. இதன் புதிய அங்கமான மாவட்ட மற்றும் பிரதேச மட்ட விசேட கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

முன்பிள்ளைப் பருவத்தில் குழந்தைகளுக்கு ஏற்படும் உடல் மற்றும் உள ரீதியான பிரச்சினைகளைக் குறைப்பதற்கு முற்கூட்டியே தலையிட்டு தேவையான சேவை வசதிகளை வழங்குவதற்கு இத்திணைக்களத்தினூடாக அமுலாக்கப்படும் சிறுவர் வழிகாட்டி நிலையங்கள் ஊடாக அங்கவீனமுற்ற சிறுவர்களின் நலன்புரிக்காக உன்னதமான கடமைப் பொறுப்பு நிறைவேற்றப்படுகின்றது. .

அங்கவீனமுற்ற சிறுவர்களின் தொழிற் பயிற்சிக்காக ஆரம்ப ஆயத்தப்படுத்தல் திணைக்களம் மூலம் 2022 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மற்றுமொரு கருத்திட்டம் ஆகும் என்பதுடன் இதன் ஊடாக தொழிற் பயிற்சி பெற்றுக் கொள்வதற்குத் தேவையான திறமையினை அபிவிருத்தி செய்தல் மேற்கொள்ளப்படுகிறது.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களைப் புனர்வாழ்வளிக்கும் நிகழ்ச்சித் திட்டம், திணைக்களம் அமுலாக்கியுள்ள மற்றுமொரு கருத்திட்டம் ஆகும். அதன் கீழ், போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை விடுதியில் வைத்து புனர்வாழ்வளித்தல்,

அவர்களைச் சமூகத்துடன் ஒன்றிணைத்தல் மற்றும் பிரதேச மட்டத்தில் மக்களை விழிப்புணர்வூட்டும் போதை தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுப்பதனூடாக நாட்டின் எதிர்கால சந்ததியின் நன்மைக்காக சிறுவர் மற்றும் இளைஞர் சமுதாயத்தை போதைப் பொருளில் இருந்து விடுவிப்பதற்கு பாரிய பங்களிப்புச் செய்கிறது.

அவ்வாறே இலக்கிடப்பட்ட சமூகத்தின் திறமைகள் மற்றும் ஆற்றல்களை வெளிக்கொணர்தல் மற்றும் பொருளாதார சமூக மற்றும் கலாசார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான பல்வேறு தேசிய நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்படுகின்றன. அவற்றுள் "சித்ரூ" தேசிய கலை நிகழ்ச்சி, அங்கவீனமுற்ற நபர்களின் "தேசிய தடகள விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சி, அங்கவீனமுற்ற சிறுவர்களின் "பக்மஹ நிகழ்ச்சி" அங்கவீனமுற்ற நபர்களின் சுயசக்தி அமைப்புக்களை மதிப்பீடு செய்வதற்கான "சுவாபிமானி" விருது வழங்கும் நிகழ்வு, "சர்வதேச வெள்ளைப் பிரம்பு தின நிகழ்வு, "சர்வதேச சைகைமொழி" தின நிகழ்வு முக்கிய இடத்தினை வகிக்கிறது. இந்த நிகழ்ச்சித் திட்டங்களினூடாக நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் பரந்துள்ள அங்கவீனமுற்ற சமூகத்தின் ஆற்றல் மற்றும் திறமை அபிவிருத்தி, வாழ்க்கை தொழிற் பயிற்சி பயிலுனர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள், பணியாட்டொகுதியினர் மற்றும் பிற அங்கத்தவர்களுக்கிடையே பரஸ்பரத் நட்புறவு, புரிந்துணர்வு மற்றும் நம்பிக்கையினை வளர்த்தல் எதிர்பாரக்கப்படுகிறது.

அவ்வாறே திணைக்களத்தின் பணிக்கூற்றினைத் தழுவியதாக சகல அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினையும் வெற்றிகரமாக்குவதற்கு, மாவட்ட, பிரதேச செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்ட சகல சமூக சேவை உத்தியோகத்தர்கள் /அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்களுக்கு இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் மற்றும் பிரதான அலுவலகத்தின் உத்தியோகத்தர்களின் வினைத்திறன், சேவை ஊக்குவிப்பு மற்றும் உற்பத்தி திறன் மற்றும் ஆன்மீக அபிவிருத்திக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகள், செயலமர்வுகள், கருத்தரங்குகள் மற்றும் பாடநெறிகளுக்காக உத்தியோகத்தர்களை அனுப்புதல் இடம்பெற்று வருகின்றது.

2022 ஆம் ஆண்டு சேவை பெறுநர் நலன்புரிக்காக மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்திட்டங்கள் ஊடாக உயர்வான செயலாற்றுகை ஒன்றினை அடைந்து கொள்வதற்கு முடிந்ததுடன் அது தொடர்பான ஏற்புடைய தகவல்கள் மற்றும் செலவுத் தலைப்பு 216 இன் கீழ் ஒட்டுமொத்த செலாற்றுகை இதில் உள்ளடங்கும்.

1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, செயற்பணி, நோக்கம்

தொலைநோக்கு

"2030 ஆம் ஆண்டளவில் ஓரங்கட்டப்பட்ட மற்றும் பின்தள்ளப்பட்ட சமூகத்தின் உரிமைகள் மற்றும் சமத்துவம் உறுதிப்படுத்தப்பட்ட பாதுகாப்பான ஓர் இலங்கையை உருவாக்கும் முன்னோடியாக விளங்குதல்"

செயற்பணி

"இலக்கிடப்பட்ட சமுதாயத்தின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் வலுவூட்டுவதனூடாக சமூக உள்வாங்குதல் தொடர்பில் உள்ளக நிறுவகத்தினை ஒருங்கிணைத்தல் மற்றும் தொழில்வாண்மையான தலையீட்டினைக் கொண்டு புதுமையான பிரவேசத்தினூடாக துரிதம், வினைத்திறன் மற்றும் விளைதிறனுடனான ஆய்வுகளை நடாத்துதல், கொள்கைகளைத் திட்டமிடுதல் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துவதனூடாக எதிர்பார்த்த விளைவுகளை அடையப் பெறுதல்"


நோக்கம்

- 16-35 வயதிற்கிடைப்பட்ட அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளின் வாழ்க்கைத் தொழில்சார் செயற்பாடுகள் மற்றும் வெளிச் செயற்பாடுகளை வலுவூட்டுதல்.
- பாதுகாவலரற்ற மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கு வதிவிடப் பாதுகாப்பினை வழங்குதல்.
- 06 - 16 வயதிற்கிடைப்பட்ட பல்வேறான அங்கவீனத்தினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் அங்கவீனத்தினைக் குறைப்பதற்கு முன்கூட்டியே தலையிடுதல்.
- அங்கவீனமுற்ற சமூகம் அன்றாட வாழ்க்கையில் முகங்கொடுக்கும் பல்வேறான பிரச்சினைகளைக் குறைப்பதற்குத் தலையிடுதல் மற்றும் வலுவூட்டுதல்.
- சைகை மொழியினை மேம்படுத்தல்
- அங்கவீனமுற்ற நபர்களுக்கு சேவைகளை வழங்கும் தன்னார்வ அமைப்புக்களை வலுவூட்டுதல்.
- போதைப் பொருளுக்கு அடிமையானவர்களினை விடுதியில் வைத்துப் புனர்வாழ்வளித்தல், அவர்களுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைத்தல்.
- பல்வேறான சமூகப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ள நபர்களுக்கு சரியான வழிகாட்டலினை வழங்குதல்.
- செவிப்புலனற்றவர்களுக்கு செவிப்புலனற்றவர்களுக்கான அடையாள அட்டைகளினை வழங்குதல்.
- திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் அறிவு, திறன் மற்றும் உளப்பாங்குகளினை உயர் தரத்திற்குக் கொண்டுவருதல்

1.3 பிரதான செயற்பாடுகள்

- அங்கவீனமுற்ற இளைஞர், யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல், சுயதொழிலுக்கான தொழில் உபகரணங்களை வழங்குதல் மற்றும் திறந்த சந்தை தொழிலுக்கு அனுப்புதல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கான தொழிற் சந்தைகளை இனம் காணுதல் மற்றும் விரிவுபடுத்துதல்.
- அங்கவீனமுற்ற நபர்களின் காலத்தின் தேவைப்பாடுகள் மற்றும் நாட்டங்களை அடையாளங் காண்பதற்கு ஆய்வினை மேற்கொள்ளல்.
- விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகள் தொடர்பாக முன்கூட்டிய தலையீட்டினூடாக அவர்களை ஒன்றிணைக்கும் கல்விக்கு அனுப்புதல்.
- செவிப்புலனற்றவர்களுக்கான அடையாள அட்டைகளை வழங்குதல் மற்றும் சைகை மொழிபெயர்ப்புச் சேவைகளை வழங்குவதனூடாக செவிப்புலனற்றவர்களின் அன்றாட நடவடிக்கைகளை இலகுபடுத்துதல்.
- பாதுகாவலர்களற்ற மூளை வளர்ச்சி குன்றிய ஆண் சிறுவர்களுக்கு வாழ்நாள் முழுதும் பாதுகாப்பினை வழங்குதல்.
- அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரி தொடர்பில் முன்னெடுத்துச் செல்லப்படும் தன்னார்வ அமைப்புக்களுக்கு நிதியுதவி வழங்குதல்.
- 60 வயதிற்குக் குறைவான விழிப்புலனற்ற நபர்களுக்கு பார்வையினைப் பெற்றுக்கொடுப்பதற்கு கண் வில்லைகளை வழங்குதல் மற்றும் வைத்திய உதவிகளை வழங்குதல். விழிப்புலனற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாப்பதற்கு விளையாட்டு, கல்விசார் மற்றும் கலாசாரம்சார் செயற்பாடுகளுக்கு உதவிகளை வழங்குதல், அவர்களின் நிறுவனங்கள் தொடர்பில் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் ஏனைய நலன்புரிச் செயற்பாடுகள்.
- சமுதாய மட்டத்திலான புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அங்கவீனமுற்ற நபர்களுக்கு தேவையான சேவைகளை வழங்குதல்.
- பிரதேச மட்டத்தில் அங்கவீனமுற்ற நபர்களின் சுய உதவி அமைப்புக்களை ஸ்தாபித்தல் மற்றும் வலுவூட்டுதல்.
- போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை விடுதியில் வைத்துப் புனர்வாழ்வளித்தல் மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
- திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் அறிவு, திறன் மற்றும் உளப்பாங்குகளினை மேம்படுத்துவதற்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகள், கருத்தரங்குகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வேலையரங்குகளுக்கு முன்வைத்தல்.

1.4 நிறுவனக் கட்டமைப்பு



1.5 திணைக்களத்தின் கீழ் உள்ள பிரதான பிரிவுகள் மற்றும் நிறுவனங்கள்

சமூக சேவைகள் திணைக்களம்

சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் நிறுவனங்கள்

- தொழிற் பயிற்சி நிறுவனங்கள்
  - கெட்டவல தொழிற் பயிற்சி நிறுவனம்
  - வத்தேகம தொழிற் பயிற்சி நிறுவனம்
  - அமுனுகும்புர தொழிற் பயிற்சி நிறுவனம்
  - மாதம்பை தொழிற் பயிற்சி நிறுவனம்
  - சீதுவ தொழிற் பயிற்சி நிறுவனம்
  - கலவான தொழிற் பயிற்சி நிறுவனம்
  - தெலம்புயாய தொழிற் பயிற்சி நிறுவனம்
  - ராகம தொழிற் பயிற்சி நிறுவனம்
  - மட்டக்களப்பு தொழிற் பயிற்சி நிறுவனம்
  - கிளிநொச்சி தொழிற் பயிற்சி நிறுவனம்
  - தோலங்கமுவ இணைந்த தொழிற் பயிற்சி நிறுவனம்
- ஜயவிரு செவண பாதுகாப்புப் புகலிடம்
- ஜயவிரு சமாதி புனர்வாழ்வு நிலையம்
- சிறுவர் வழிகாட்டி நிலையம்
  - நாவின்ன சிறுவர் வழிகாட்டி நிலையம்
  - சித்திஜய சிறுவர் வழிகாட்டி நிலையம்
- கொட்டாவ முன் வாழ்க்கைத் தொழிற் திறன் அபிவிருத்தி நிலையம்

சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்கள்

- நிர்வாகப் பிரிவு
- சைகை மொழிபெயர்ப்பாளர் பிரிவு
- சேவைகள் பிரிவு
- சமுதாய மட்டப் புனர்வாழ்வுப் பிரிவு (சீ.பீ.ஆர்.)
- அபிவிருத்திப் பிரிவு
- நிதி மற்றும் கணக்குப் பிரிவு
- உள்ளக கணக்காய்வுப் பிரிவு
- ஆராய்ச்சி மற்றும் ஊடகப் பிரிவு

1.5.1 திணைக்களத்திற்கு உரித்தான பிரிவுகள்

1.5.1.1 நிர்வாகப் பிரிவு

சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிக்கூற்றினூடாக அடையச் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களினை, வினைத்திறனாகவும், விளைத்திறனாகவும் அடையச் செய்வதற்குத் தேவையான உதவிச் சேவைகளினை வழங்குதல் நிர்வாகப் பிரிவின் பிரதான கடமைப் பொறுப்பாகும்.

அதில் மனித மற்றும் பௌதிக வளங்களினை முகாமை செய்யும் செயற்பாடுகள், நிறுவனம்சார், நிர்வாகம்சார் கடமைகளினை முன்னெடுத்தல், கொள்கைசார் தீர்மானங்களினை அமுலாக்குதல், திணைக்களத்தின் சகல பிரிவுகளுக்கும் உதவிச் சேவைகளினை வழங்குதல் மற்றும் பின்வரும் செயற்பாடுகள் நிர்வாகப் பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்றன.

- சமூக சேவைகள் திணைக்களத்தின் பொதுவான நிர்வாகச் செயற்பாடுகள் மற்றும் திணைக்களத்தின் சகல தபால் தொடர்பிலும் நடவடிக்கை எடுத்தல்.
- திணைக்களத்தின் பணியாட்டொகுதி தொடர்பில் உத்தியோகத்தர்களினை ஆட்சேர்ப்புச் செய்தல், பதவியுயர்வுகள், வினைத்திறன் தடை காண் பரீட்சை நடாத்துதல், சம்பள ஏற்றக் கொடுப்பனவு, இடமாற்றங்கள் மற்றும் ஓய்வுபெறுதல் போன்ற பிரத்தியேகக் கோவையுடன் தொடர்பிலான சகல செயற்பாடுகள்.
- சேவைத் தேவையின் அடிப்படையில் புதிய பதவிகளினை அங்கீகரித்தல், ஆட்சேர்ப்புத் திட்டங்களினைத் தயாரித்தல், பணியாட்டொகுதியின் தகவல்களினை நாளதுவரைப்படுத்துதல், அமைச்சரவை விஞ்ஞாபனங்களினைத் தயாரித்தல் போன்ற கடமைச் செயற்பாடுகள்.
- பணியாட்டொகுதியின் விடுமுறை, புகையிரத ஆணைச்சீட்டுக்கள், மேலதிக நேரக் கொடுப்பனவுகள் மற்றும் இடர் கடனினை வழங்குவதற்கான செயற்பாடுகள்.
- அக்ரஹார காப்புறுதித் திட்டத்துடன் தொடர்பிலான கடமைகள்.
- வீட்டு வாடகைகளினை அறவீடு செய்வதுடன் தொடர்பிலான கடமைகள்.
- அலுவலகக் கட்டளைகளினைச் சமர்ப்பித்தல், திணைக்களச் சுற்றுநிரூபங்கள், திணைக்களத்திற்கான ஆலோசனைகளினை வழங்குதல், ஏனைய அரச நிறுவனங்களிலிருந்து வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிரூபங்களினைப் பெற்று, சுற்றுநிரூபக் கோவைகளினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் அதில் குறிப்பிடப்பட்ட விடயங்களினை அமுலாக்குதல்.
- வரவுப் பதிவேடு, வெளிச் செல்லும் பதிவேடு, சுருக்க லீவுப் பதிவேடு, லீவுப் பதிவேடு மற்றும் கைவிரல் அடையாளக் குறிப்புக்களின் பொழிப்பு ஏடு ஆகியவற்றைப் பேணுதல்.
- வெளிநாட்டு லீவு, வெளிநாட்டு புலமைப்பரிசில் மற்றும், வெளிநாட்டுப் பயிற்சிகள் தொடர்பான கடமைகள்.
- திணைக்களத்தின் பிரதான அலுவலகம் மற்றும் நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் ஒழுக்காற்று தொடர்பான கடமை நடவடிக்கைகள்.
- திணைக்களத்தின் பிரதான அலுவலகம் மற்றும் அதனோடு தொடர்பான நிறுவனங்களின் போக்குவரத்து நடவடிக்கைகள்.

- சீருடைக் கொடுப்பனவுகளுக்கு உரித்துடைய உத்தியோகத்தர்களை இனம் காணல் மற்றும் அவர்களுக்குரிய சீருடைக் கொடுப்பனவை இனம் காணல் மற்றும் கொடுப்பனவைச் செலுத்துதல் தொடர்பான கடமை நடவடிக்கைகள்.
- திணைக்களத்தின் கீழ் உள்ள நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் சார்பில் பதில் கடமை மேற்கொள்ளல், தழுவல் அங்கீகாரத்துக்காக நியமன அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்தல் மற்றும் அது தொடர்பான கடமை நடவடிக்கைகள்.
- திணைக்களத்தின் கீழ் உள்ள நிறுவனங்களுக்காக ஒப்பந்த/பதில் சேவை அடிப்படையில் உத்தியோகத்தர்களை கடமையில் ஈடுபடுத்தல் மற்றும் நியமித்தல்.
- 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பான பணிகள்.
- திணைக்களத்தின் மின்சாரம், தொலைபேசி, இணையத்தளம், பாதுகாப்புச் சேவைச் செலவுகள், துப்புரவு சேவைகள், பத்திரிகைகளின் செலவுகளுக்கான பற்றுச்சீட்டுக் கொடுப்பனவுகள் மற்றும் திணைக்களத்தின் இயந்திரங்கள், உபகரணங்களைப் பழுதுபார்த்தல் தொடர்பான பணிகள்.

1.5.1.2 சைகை மொழிப் பிரிவு

செவிப்புலனற்ற மற்றும் பகுதியளவில் செவிப்புலனற்ற நபர்களுக்கு, கல்விசார், சமூக, கலாசார சேவைகளினை வழங்குவதற்கும், மருத்துவ சுகாதார மற்றும் சட்ட வசதிகளினை வழங்குவதற்குமான தொடர்பாடல் ஊடகமாக விளங்குவது சைகை மொழியாகும். இச்சேவை மொழியினை, மொழியொன்றாக அங்கீகரிப்பதற்கு 2010.09.05 ஆந் திகதி அமைச்சரவை கொள்கைசார் தீர்மானமொன்றினை எடுத்தது.

சைகை மொழி மொழிபெயர்ப்புச் சேவையினை வழங்குவதற்கு தற்போது திணைக்களத்திற்கு சைகை மொழி உத்தியோகத்தர்கள் 06 பேர் இணைக்கப்பட்டு கடமையாற்றுவதுடன், அதில் மூவர் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களிலும் மற்றும் ஏனைய மூவர் பிரதான அலுவலகத்தின் சைகை மொழிப் பிரிவிலும் கடமையாற்றுகின்றனர்.

செவிப்புலனற்ற நபர்களின் தொடர்பாடல் தொடர்பில், அரச நிறுவனங்களுக்குத் தேவையான உதவியினை வழங்குதல் (உதாரணமாக, பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள், வைத்தியசாலைகள், அரசின் பிற நிறுவனங்கள்) மற்றும் தேசிய தொலைக்காட்சி அலைவரிசையில் பகல் 12.00 மணி மற்றும் மாலை 6.55 மணி, சிரச தொலைக்காட்சி அலைவரிசையில் இரவு 7.00 மணி பிரதான செய்தி ஒளிபரப்பிலும் சைகை மொழிபெயர்ப்பாளர்களின் சேவை வழங்கப்படுகின்றது.

1.5.1.3 சமுதாய மட்டப் புனர்வாழ்வுப் (சீ.பீ.ஆர்.) பிரிவு

அங்கவீனமுற்ற நபர்களின் சமுதாயத்தினை புனர்வாழ்வளித்தல் அல்லது சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு (சீ.பீ.ஆர்.) நிகழ்ச்சித் திட்டம், அங்கவீனமுற்ற நபர்களுக்கு சேவைகளினை வழங்குதல், சம வாய்ப்புக்களினை வகுத்தல் மற்றும் அவர்களின் மனித உரிமைகளினைப் பாதுகாத்து மேலோங்கச் செய்யும் மூலோபாயமொன்றாகும்.

அங்கவீனமுற்ற நபர்களினைப் புனர்வாழ்வளிப்பதற்கு அமுலாக்கப்பட்டு வரும் தேசிய நிகழ்ச்சித் திட்டமொன்றாக சமூக சேவைகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் கீழ் 1994 ஆம்

ஆண்டில் சீ.பீ.ஆர். நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இது வரை சமூக **சேவைகள் திணைக்களத்தின் சீ.பீ.ஆர். பிரிவினூடாக இந்நிகழ்ச்சித் திட்டம் அமுலாக்கப்படுகின்றது.**

அங்கவீனத்தினைக் கொண்ட நபர்களுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும், அவர்கள் வாழும் சமூக அமைப்புகளுக்கும் இடையிலான தொடர்பினை ஏற்படுத்துவதனூடாக அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாத்தல், வலுவூட்டுதல், சுயாதீனமாகச் செயற்படுவதற்கு முடியுமான வகையில் அவர்களினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்நிகழ்ச்சித் திட்டத்தில் ஈடுபட்டுள்ள வெளிகளம்சார்ந்த உத்தியோகத்தர்களினை தொடர்புபடுத்துதல் அது தொடர்பிலான நிகழ்ச்சித் திட்டங்களினை ஒருங்கிணைத்தல் மற்றும் தொழிற்படுத்துவதனூடாக பின்வரும் செயற்பாடுகள் இப்பிரிவினூடாக இடம்பெறுகின்றது.

- அங்கவீனமுற்ற நபர்களுக்கு புனர்வாழ்வுத் திட்டத்தினைத் தயாரிப்பதனூடாக புனர்வாழ்வினை முன்னெடுத்தல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கு நேரடி ஒதுக்கீடுகளினை வழங்குதல் மற்றும் பின்தொடர் செயற்பாடுகளினை முன்னெடுத்தல். (கொமட், நீர், மின்சார வசதிகள் மற்றும் பிரவேசிப்பு வசதிகளினை வழங்குதல்.)
- பிரதேச மட்டத்தில் அங்கவீனமுற்ற நபர்களின் சுவசக்தி அமைப்புக்களினை அமைத்தல், வலுவூட்டுதல் மற்றும் "சுவ அபிமானி" என்ற பெயரிலான வருடாந்த வைபவத்தினூடாக சுவசக்தி அமைப்புக்கள் மற்றும் நபர்களினைப் பாராட்டுதல்.
- அரச மற்றும் அரச சார்பற்ற பிற அமைப்புக்களுடன் இணைந்து சேவைத் தேவைப்பாடுகளினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு வசதிகளினை ஏற்படுத்துதல்.
- அங்கவீனமுற்ற பிள்ளைகள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் திறன் விருத்தி நிலையங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளினை வழங்குதல்.
- மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களினை நடாத்துதல்.
- சீ.பீ.ஆர் நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்புபட்டு பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் வெளிக்களக் கடமைச் செயற்பாடுகளினை முன்னெடுக்கும் சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் அறிவினை நாளதுவரைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.

1.5.1.4 சேவைகள் பிரிவு

இலங்கை பூராவும் சிதறியுள்ள அங்கவீனமுற்ற நிலைக்கு உட்பட்ட நபர்களினை அரச அனுசரணையின் கீழ் வலுவூட்டி கௌரவமான பிரஜைகளாக வாழும் உரிமையினைப் பாதுகாக்கும் நோக்குடன் சேவைகள் பிரிவு அமுலாக்கப்படுவதுடன். அதன் நோக்கங்களினை அடையும் பொருட்டு பின்வரும் கடமைப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுகின்றன.

- 16-35 வயதிற்கிடைப்பட்ட அங்கவீனமுற்ற சமுதாயத்தினை வாழ்க்கைத் தொழில் பயிற்சியினூடாக வலுவூட்டுதல்
- தொழிற் பயிற்சிக்கு அனுப்புவுதற்காக அங்கவீனமுற்ற சிறுவர்களின் ஆரம்ப தொழில் திறமை அபிவிருத்தி
- தொழிற் பயிற்சியை நிறைவுசெய்த பயிலுனர்களை தொழிலில் (சுயதொழில் மற்றும் நிறுவன) ஈடுபடுத்தல் மற்றும் பின்னாய்வு செய்தல்
- போதைப்பொருள் பாவனையினைத் தடுப்பதற்காக போதைப்பொருள் மறுவாழ்வு மையத்தினூடாக போதைப் பிரியர்களின் புனர்வாழ்வு மற்றும் சமூகமயப்படுத்தல் தொடர்பான சேவைகளை வழங்குதல்.

- அங்கவீனமுற்ற நபர்களுக்காக அமுலாக்கப்படும் விசேட கல்வி அலகு / அரச சார்பற்ற முன்பள்ளி ஆசிரியர்களின் சேவையினைப் பாராட்டுதல் மற்றும் ஊக்குவிப்பதற்கான கொடுப்பனவுகளினை வழங்குதல்.
- பெற்றோர் / பாதுகாவலர்களை இழந்த மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் பாதுகாப்பு நிலையத்தினூடாக மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் பாதுகாப்புத் தொடர்பில் தேவையான சேவைகளினை வழங்குதல்.
- அங்கவீனமுற்ற சமுதாயத்திற்கென அமுலாக்கப்படும் தன்னார்வத் தொண்டு அமைப்புக்களுக்கு பராமரிப்பு உதவிகளினை வழங்கி அந்நிறுவனங்கள் முன்னெடுக்கும் சமூகப் பணிக்கு அரச அனுசரணையினை வழங்குதல்.

1.5.1.5 அபிவிருத்தி பிரிவு

அபிவிருத்திப் பிரிவினூடாக திணைக்களத்தின் ஒட்டுமொத்தச் செயற்பாட்டில் நேரடியாக தாக்கம் செலுத்தும் பல கடமைப் பொறுப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. திணைக்களத்தின் திட்டங்களை வகுத்தல் (உபாயவழிமுறைத் திட்டம், செயற்பாட்டுத் திட்டம்) முன்னேற்ற அறிக்கை தயாரித்தல் போன்றே உத்தியோகத்தர்களின் இயலளவை அபிவிருத்தி செய்வதற்கு இணையாக இடம்பெறும் பயிற்சிகள், அறிவினை நாளதுவரைப்படுத்தல் மற்றும் உற்பத்தி திறன் அபிவிருத்தி போன்றன முக்கிய இடம் வகிக்கிறது.

அதேபோல தேசிய நிகழ்ச்சித் திட்டங்களினை ஒருங்கிணைத்தல், தொடர்புபடுத்தல் மற்றும் தொழிற்படுத்தல், பல்வேறு கருத்திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல், தகவல்களினை நாளதுவரைப்படுத்தல், நவீன சமூக போக்குகளினை அடையாளங்காணுதல் மற்றும் அவற்றினை பயன்படுத்துதல் தொடர்பிலும் முக்கியமான கடமைப் பொறுப்பொன்று நிறைவேற்றப்படுகின்றது. அதற்கு மேலாக திணைக்களத்தின் நோக்கங்களினைத் தழுவி திணைக்களத்தின் செயற்பாடுகளினை முன்னெடுத்துச் செல்லுவதற்கு பின்வரும் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றது.

- திணைக்களத்தினூடாக வருடந்தோறும் நடாத்தப்படும் தேசிய நிகழ்ச்சித் திட்டங்களினை (தேசிய தடகள விளையாட்டுப் போட்டி, சித்றா தேசிய கலை நிகழ்ச்சி, புத்தாண்டு வைபவம்) ஒருங்கிணைத்தல் மற்றும் தொழிற்படுத்துதல்.
- திணைக்களத்தின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம், செயற்திறன் அறிக்கை மற்றும் முன்னேற்ற அறிக்கைகளினைத் தயாரித்தல்.
- திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை ஒருங்கிணைத்தல் மற்றும் நடாத்துதல்.
- வைத்தியசாலைகளில் நோயாளர்களின் நலன்புரிச் செயற்பாடுகளுக்கு உரிய உத்தியோகத்தர்கள் தொடர்பிலுமான சகல ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள்.
- தன்னார்வத் தொண்டு அமைப்புக்கள் தொடர்பிலான கடமைகள் மற்றும் சமூக சேவை அமைப்புக்களுக்கு (உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட புண்ணிய ஸ்தாபனங்கள் அல்லது தன்னார்வ சமூக சேவை அமைப்புக்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட இலாப நோக்கமற்ற அமைப்புக்கள்) கிடைக்கப் பெறும் வெளிநாட்டு அன்பளிப்புக்களுக்காக சுங்கவரி நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான பரிந்துரைகளை வழங்குவதல் தொடர்பான கடமை நடவடிக்கைகள்.
- அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் ஆகியன ஒன்றிணைந்து மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான கடமை நடவடிக்கைகள்.
- திணைக்களத்திற்கு உரித்தான காணிகளினை ஒப்படைத்தல் மற்றும் அது தொடர்பிலுள்ள பிரச்சினைகளினைத் தீர்த்தல் மற்றும் அது தொடர்பிலான துணை ஆவணங்களினைப் பேணிச் செல்லுதல்.

- அங்கவீனமுற்ற நபர்களின் ஆளடையாளத்தை உறுதி செய்வதற்கான அடையாள அட்டைகளை வழங்குதல்.
- உற்பத்தி திறன் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

1.5.1.6 நிதி மற்றும் கணக்குகள் பிரிவு

சமூக சேவைகள் திணைக்களத்திற்கான தொழிற்பாடுகள், அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான வருடாந்த ஒதுக்கீடுகளினைப் பெற்றுக்கொள்ளுதல், முகாமை செய்தல், கொடுப்பனவுகளினைச் செய்வதுடன், அரச கணக்குகளினை முன்னெடுத்துச் செல்லுவதில் வெளிப்படைத் தன்மையுடன், நிதிப் பிரமாணங்களினூடாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், நிதியினை மோசடியில்லாது ஒழுக்கத்துடன் முன்னெடுத்துச் செல்லுதல் கணக்குகள் பிரிவினூடாக நிறைவேற்றப்படும் பிரதான கடமைப் பொறுப்பாகும்.

இதில் பிரதான கணக்காளரின் வழிகாட்டல், முகாமை, மேற்பார்வை மற்றும் வழிநடாத்தல் மூலமாக கணக்குச் செயற்பாடுகள் இடம்பெறுவதுடன், நிதிப் பிரமாணங்கள், விசேட ஏற்பாடுகள் மற்றும் அரசின் சுற்றிநிருபங்களினூடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பின்வரும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

- சமூக சேவைகள் திணைக்களத்திற்கு உரித்தான ஒட்டுமொத்த வருடாந்த பாதீட்டு ஆவணத்தினைத் தயாரித்து குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு முன்வைத்தல்.
- சகல கொடுக்கல் வாங்கல்களினைச் சரியாக நாளதுவரைப்படுத்தி கணக்கு வைத்தல் மற்றும் கணக்குகளினை முன்வைத்தல்.
- உள்ளக நிதிக் கொள்கை வகுப்பு மற்றும் நிதி முகாமைத்துவத்தை பலப்படுத்துவதற்கு உயர்மட்ட முகாமைக்கு உதவுதல்.
- சகல பெறுவனவு மற்றும் செலவுகளினைக் கண்காணித்தல் மற்றும் செலவுகளினை முகாமை செய்தல்.
- செலவுகளினை மீளாய்வு செய்வதற்கு உயர் முகாமைத்துவத்திற்கு முன்மொழிவுகளினை முன்வைத்தல்.
- பொதுத் திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களத்திற்கு இறுதிக் கணக்குகளினை முன்வைத்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளினை முன்னெடுத்தல்.
- சகல கொள்வனவுகளின் போதும் வெளிப்படைத் தன்மையுடனான கொள்முதல் நடைமுறையினூடாக நிதிசார் சட்டதிட்டங்களினை சரியானவாறு அமுலாக்குதல் மற்றும் உதவுதல்.
- சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள அரச சொத்துக்களினை நாளதுவரைப்படுத்தல் மற்றும் ஆய்வுசெய்தல்.

1.5.1.7 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு நிறைவேற்றப்படுவதனை உறுதிசெய்வதற்காக அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ள நியமனங்கள் மற்றும் நிதிப் பிரமாணக் குறிப்பு 133 மற்றும் 134 பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்கள் மற்றும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்கள சுற்றறிக்கையின் விதிகளின் பிரகாரம் கணக்காய்வுப் பணிகள் இப் பிரிவு மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

1.5.1.8 ஆராய்ச்சி மற்றும் ஊடகப் பிரிவு

சமூக சேவைகள் திணைக்களம் மூலம் சேவை வழங்கும் சேவை பெறுநர்களின் பிரச்சினைகள் மற்றும் தேவைப்பாடுகளை இனம் கண்டு அவர்களுக்கு மிகவும் பயனுள்ள சேவையினை வழங்குதல் இப் பிரிவை தாபிப்பதற்கான முக்கிய நோக்கம் என்பதுடன் குறித்த நோக்கத்தை அடைந்து கொள்வதில் பின்வரும் கடமைப் பொறுப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- சமூக பொருளாதார சூழலில் இடம்பெறும் சமூக மாற்றங்களுடன் உருவாகும் சமூக சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்
- சமூக சேவைகள் திணைக்களம் மூலம் வழங்கப்படும் சேவைகளின் தரம் மற்றும் உற்பத்தி திறனை அளவீடு செய்வதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.
- தேசிய ரீதியில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் அவ்வாறு நாடளாவிய ரீதியில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகளைத் தயாரித்தல்.
- சமூக சேவைகள் திணைக்களத்துக்கு ஏற்புடைய சட்டங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி நவீன தேவைப்பாடுகளுக்கு அமைவான திருத்தங்களுக்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- சமூக சேவைகள் திணைக்களம் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் தேசிய வைபவங்கள் தொடர்பான ஊடக அறிவிப்புக்களை தயாரித்தல் மற்றும் ஊடக உள்ளடக்கம் தொடர்பான ஒருங்கிணைப்பு பணிகள்.
- சமூக சேவைகள் திணைக்களத்தின் கடமைப் பொறுப்பை மேம்படுத்தல், இலக்கு நோக்கிய சேவை பெறுநர்களை அறிவூட்டல் மற்றும் கவர்வதற்கான கற்புல, செவிப்புல மற்றும் எழுத்து ஊடக மேம்பாட்டுக் கருவிகளை வடிவமைத்தல்.

1.5.2 திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்கள்

1.5.2.1 வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்கள்

அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் சிங்கள மொழி மூலமான 08 வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்கள், தமிழ் மொழி மூலமான 02 வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் இணைந்த வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம் ஒன்று முழு நாட்டையும் உள்ளடக்கியதாக கம்பஹ, கண்டி, இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, புத்தளம், கேகாலை, மட்டக்களப்பு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் அமுலாக்கப்படுகின்றது. இந்த தொழிற் பயிற்சி நிறுவனங்கள் ஊடாக நாடுபூராவும் பரந்து காணப்படும் அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளின் தொழில்சார் இயலுமைகளினை வலுவூட்டல் மற்றும் திறன் அபிவிருத்தி ஊடாக அவர்கள் பொருளாதார அபிவிருத்தியின் பங்காளர்களாக சமூகமயப்படுத்தப்படுவார்கள்

தொழிற் பயிற்சி நிறுவனங்கள் தொடர்பான அடிப்படைத் தகவல்கள்

தொழிற் பயிற்சி நிறுவனத்தின் பெயர்	நிறுவனம் அமைந்துள்ள மாகாணம்	நிறுவனம் அமைந்துள்ள மாவட்டம்	ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு / திகதி	முகவரி	தெலைபேசி இலக்கம்
சீதுவ	மேல்	கம்பஹ	1956 ஒக்டோபர் 01	லியனகேமுல்ல, சீதுவ	011-2253503
வத்தேகம	மத்திய	கண்டி	1963 பெப்ரவரி 15	வாவின்ன, வத்தேகம	081-2476209
கெட்டவல			1968	கெட்டவல, லெவ்வல, கண்டி	081-2219153
தெலம்புயாய	தென்	அம்பாந்தோட்டை	1981 மார்ச் 28	**தெலம்புயாய, அங்குனகொலபெலெஸ்ஸ**	047-3489296
ராகம	மேல்	கம்பஹ	1984 சனவரி	புனர்வாழ்வு வைத்தியசாலை, ராகம	011-2967342
அமுனுகும்புர			1990 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 1991 ஆம் ஆண்டு தொழிற் பயிற்சி நிறுவனமாக அபிவிருத்தி செய்யப்பட்டது	**அமுனுகும்புர, வத்துருகம**	033-2279321
கலவான	சபரகமுவ	இரத்தினபுரி	2006 மார்ச 24	பஹல குக்குலேகம, மீபாகம, கலவான	045-2255017
மாதம்பை	வடமேல்	புத்தளம்	2014 யூன் 15	தேவால வீதி, பொத்துவில, மாதம்பை	032-2248568
தோலங்கமுவ	சபரகமுவ	கேகாலை	2021 நவம்பர் 17	இணைந்த தொழிற் பயிற்சி நிறுவனம், தோலங்கமுவ	081-2476209
மட்டக்களப்பு	கிழக்கு	**மட்டக்களப்பு**	2021 டிசம்பர் 02	கும்புறுமூலை, வாழச்சேனை	065-3132223
கிளிநொச்சி	வடக்கு	கிளிநொச்சி	2022 டிசம்பர் 20	பொன் நகர், கிளிநொச்சி	076-6526167

செயற்பாடுகள்

I. அங்கவீனமுற்ற இளைஞர், யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல் மற்றும் ஆளுமை விருத்தி.
II. அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளின் விளையாட்டு மற்றும் கலைத் திறன்களினை மேம்படுத்துதல்.
III. முறைசார் வகையில் பயிற்சியினை நிறைவு செய்துள்ள பயிலுனர்களுக்கு சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைத்தல்.
IV. சுய தொழில்களுக்கான உபகரணத் தொகுதிகளை வழங்குதல், திறந்த சந்தைப் பிரிவில் தொழில் வாய்ப்புக்களினை அறிமுகப்படுத்துதல்.

16 - 35 வயதுக்கு இடைப்பட்ட தகைமை உள்ள அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகள் விஞ்ஞான ரீதியான முறையின் கீழ் மேற்கொள்ளப்படும் நேர்முகப் பரீட்சையின் பின்னர் அவர்களது திறமைக்கு ஏற்ற பயிற்சி நெறிகளுக்காக தெரிவு செய்யப்படுவார்கள். பாடநெறியின் தன்மைக்கு ஏற்ப பயிற்சிக் காலம் மாற்றமடைவதுடன் அதன் பிகாரம் ஓராண்டு அல்லது இரண்டு ஆண்டுகள் முறைசார்ந்த பயிற்சி தெரிவுசெய்யப்பட்ட பயிலுனர்களுக்கு வழங்கப்படும். பல்வேறுபட்ட 26 பாடநெறிகளின் கீழ் இப்பயிற்சி வழங்கப்படுவதுடன் பயிற்சிக் காலத்திற்குள் நாளாந்த கொடுப்பனவு மற்றும் விடுதி வசதிகள், உணவு பானம் மற்றும் மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படும்.

வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவகங்களினால் முன்னெடுக்கப்பட்டு வரும் பாடநெறிகள்

பாடநெறி	கொள்ளளவு	130	50	100	100	100	24	30	40	50	20	50
	ஆட்சேர்க்கப் படும் பயிலுனர்க ள்	பெண்/ ஆண்	பெண்/ ஆண்	பெண்/ ஆண்	பெண்/ ஆண்	பெண்/ ஆண்	பெண்/ ஆண்	பெண்/ ஆண்	பெண்/ ஆண்	பெண்/ ஆண்	பெண்/ ஆண்	பெண்/ ஆண்
	பாடநெறி இல.	சீதுவ	கெட்டவ ல	ித்தேகம	தெலம்பு பாய	அமுலு கும்புர	ராகம	கலவான	மாதம் பை	மட்டக்க ளப்பு	தோலங் கமவ	கிளிநொ
1. வானொலி, தொலைக்காட்சி மற்றும் அதனுடன் தொடர்பான உபகரணங்களின் தொழில்நுட்ப கைவினை	02 ஆண்டு	■		■	■		■			■		
2. தச்சு தொழில் கைவினை	02 ஆண்டு	■	■		■	■						
3. ஆடை தைத்தல் கைவினை	02 ஆண்டு	■		■	■		■		■	■		■
4. கணனி	02 ஆண்டு	■	■	■	■		■		■			■
5. முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கில் தொழில்நுட்பக் கைவினை	02 ஆண்டு			■								
6. மோட்டார் வாகன தொழில்நுட்பக் கைவினை	02 ஆண்டு			■	■							
7. வீட்டுத் தோட்ட விவசாய கைவினை	02 ஆண்டு				■	■		■				
8. குளிர்சாதன மற்றும் குளிரூட்டி தொழில்நுட்பக் கைவினை	01 ஆண்டு	■										
9. தையல் இயந்திர திருத்தம் (தொழிற்சாலை – ஜூகி)	01 ஆண்டு	■							■			
10. கைப்பணித் தொழில் கைவினை (மூங்கில் மற்றும் சிரட்டை)	02 ஆண்டு							■				
11. கைப்பணித் தொழில் கைவினை (விளக்குமாறு மற்றும் தும்புத்தடி)	01 ஆண்டு					■						
12. கைப்பணித் தொழில் கைவினை (பிரம்பு மற்றும் கயிறு)	01 ஆண்டு	■										
13. கைப்பணித் தொழில் கைவினை (அலங்காரம்)	01 ஆண்டு					■			■		■	
14. தையல் கைவினை	01 ஆண்டு			■		■						
15. மசாஜ் சிகிச்சை	01 ஆண்டு	■										
16. மேசன் தொழில்நுட்பக் கைவினை	02 ஆண்டு			■								
17. மின்சார கைவினை	02 ஆண்டு		■		■							
18. மோட்டார் வாகனங்களுக்கு வர்ணம் பூசும் கைவினை	02 ஆண்டு		■									
19. உருக்குக் கைவினை	02 ஆண்டு		■									
20. சீமெந்து உற்பத்திக் கைவினை	02 ஆண்டு					■						
21. காலணிகள் மற்றும் தோல் பொருள் தொழில்நுட்பக் கைவினை	01 ஆண்டு			■								

22. பதிக் கைவினை	01 ஆண்டு			■							■		
23. வெதுப்பகம்/ உணவு தொழில்நுட்பம்	01 ஆண்டு					■							
24. துணி நெசவுத் தொழில்நுட்பக் கைவினை	01 ஆண்டு	■											
25. அழகியல் கலை	01 ஆண்டு			■									
26. மரச் செதுக்கல் கைவினை	02 ஆண்டு	■											

* ராகம தொழிற் பயிற்சி நிறுவனத்தின் பாடநெறிக் காலம் 06 மாதம் முதல் 01 ஆண்டு வரை மாற்றமடையக் கூடும்.

1.5.2.2 ஜயவிரு செவண பாதுகாப்புப் புகலிடம்

பெற்றோர் அரவணைப்பற்ற உளநலம் பாதிக்கப்பட்ட அங்கவீனமுற்ற ஆண் பிள்ளைகளுக்கு பாதுகாப்பினை வழங்குவதற்கென 2001 யூலை மாதம் 31 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ள ஜயவிரு செவண நிறுவனம், மேல் மாகாணத்தில். கொழும்பு மாவட்டத்தின் சீதாவக்க பிரதேச செயலகப் பிரிவிலுள்ள புவக்பிட்டிய வடக்கு அம்பலன்வத்த என்ற இடத்தில் அமைந்துள்ளது.

மூளைவளர்ச்சி குன்றிய சமுதாயத்திற்கு பாசம் மற்றும் அன்பினை வழங்குவதனூடாக அவர்களின் இயலுமைகள் மற்றும் திறமைகளினை வளர்ப்பதற்கு வாய்ப்பினை வழங்குதல் மற்றும் அவர்களினை உற்பத்திச் செயற்பாட்டில் பங்குபற்றச் செய்து தேசிய அபிவிருத்தியின் பங்குதாரர்களாக்குவதை பணிக்கூற்றாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் இந்நிறுவனத்தினூடாக வாழ்நாள் முழுவதும் விடுதியில் வசிக்கும் இந்த சிறுவர்களை தனிமைப்படுத்தாமல் அன்பு மற்றும் பாசத்துடன் பராமரிப்பது மட்டுமன்றி அன்றாட செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பாதுகாப்பு பெறும் காலத்துக்குள் விடுதி வசதிகள் உள்ளிட்ட உணவு மற்றும் பானம், மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படுகிறது.

1.5.2.3 ஜயவிரு சமாதி புனர்வாழ்வு நிறுவனம்

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களினைப் புனர்வாழ்வளித்தல், சமூகத்துடன் ஒன்றிணைத்தல், தொழில்வாண்மையான இயலுமைகளினை மேம்படுத்துவதற்கு, சமூக சேவைகள் திணைக்களத்தில் அமுலாக்கப்பட்ட நவோதய கருத்திட்டத்தின், துணைக் கருத்திட்டமொன்றாக 2007.07.31 ஆந் திகதி ஆரம்பிகப்பட்டுள்ள இந்நிறுவனம், மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தின் சீத்தாவக்க பிரதேச செயலகப் பிரிவிலுள்ள புவக்பிட்டிய tடக்கு அம்பலன்வத்த என்ற இடத்தில் அமைந்துள்ளது.

பிரத்தியேக மறுவாழ்வு மையமொன்றாக பல்லாண்டுகளாக அமுலாக்கப்படும் ஜயவிரு சமாதி புகலிடத்தினை முன்னெடுத்துச் செல்லும் வேளையில் காட்டப்பட்ட தரமான சேவையினைப் பாராட்டுமுகமாக, மருந்துகளுக்கு அடிமையானவர்களுக்குச் சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்களின் செயற்பாடுகளினை ஒழுங்குபடுத்துவதற்கான 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் (சிகிச்சை மற்றும் மறுவாழ்வு) தொடர்பிலான சட்டத்தின் 2 வது பிரிவின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட மறுவாழ்வு மையமொன்றாக தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டு சபை பரிந்துரை வழங்கி உள்ளது.

உண்மையான வாழ்க்கை தத்துவம், வாழ்க்கையின் உண்மையான மகிழ்ச்சியினைச் சொல்லிக் கொடுத்து வாழ்க்கைத் திறன்களை மேம்படுத்துவதன் மூலம் போதைப் பொருள் எனும் வலையில் வீழ்ந்த இளைஞர் சந்ததியினை தேசிய வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யும் நோக்கத்துடன் பல்வேறு போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களினை விடுதியில் வைத்துப் மறுவாழ்வளித்தல் இந்நிறுவனத்தினூடாக இடம்பெறுகிறது.

நீதிமன்றக் கட்டளைகளினூடாக, தானாக முன்வந்து தன்னார்வமாக, பிரதேச செயலகங்கள் மற்றும் மருத்துவசாலைகளினூடாக அனுப்பப்படும் பயனாளிகளினை, ஒரே தடைவையில் சுமார் 50 பேர் வரை புனர்வாழ்வுக்கு முன்வைக்க முடியும் என்பதுடன், புனர்வாழ்வளிக்கும் காலம் 03 மாதங்கள், 06 மாதங்கள் மற்றும் 01 வருடம் வரையான காலம் வரை இடம்பெறும். நீதிமன்றக் கட்டளைகளினை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கப்படும் பயனாளிகளின் புனர்வாழ்வளிக்கப்பட வேண்டிய காலம் நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

செயற்பாடுகள்

I. போதைப்பொருளுக்கு அடிமையானவர்களினைப் புனர்வாழ்வளித்தல், அவர்களின் வாழ்க்கைத் தொழிற் திறன்களினை மேம்படுத்துதல் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைத்தல்.
II. போதைப்பொருளுக்கு அடிமையானதன் காரணத்தினால் அவர்களின் குடும்பச் சூழலில் எழுந்துள்ள சிக்கல்களினைக் குறைப்பதற்கு தலையீடு செய்தல்.
III. போதைப்பொருள் பாவனையின் காரணமாக சரிந்த தொழில்கள் மற்றும் கல்வி நடவடிக்கைகளினை பழைய நிலைக்குக் கொண்டு வந்து அது தொடர்பில் உரிய பங்குதாரர்களுடன் தொடர்புகளினைக் கட்டியெழுப்புதல்.
IV. கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய குழுக்களுக்கு போதைப் பொருள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.

1.5.2.4 சிறுவர் வழிகாட்டல் நிலையம்

சிறுவர் ஒருவரது பிறப்பில் இருந்தே வளர்ச்சியில் ஏதேனும் அசாதாரண நிலைமை அல்லது தாமதம் உள்ளதென சந்தேகிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அது தொடர்பில் முற்கூட்டியே தலையிட்டு பிள்ளையை விருத்தி செய்வதற்கு தேவையான வழிகாட்டலை வழங்குதலை நோக்கமாக கொண்டு சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் உள்ள 02 நிறுவனங்கள் ஊடாக சிறுவர் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. சரியான வழிகாட்டலைப் பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்புடன் நிறுவனத்துக்கு வருகை தரும் பெற்றோர்களுக்காக ஆரம்பமாக பிள்ளையின் வாழ்க்கை பற்றிய தகவல்கள் பெறப்பட்டு பிள்ளையை பதிவு செய்து பிள்ளையின் தேவையினை இனம் க்டு வளர்ச்சி நிலையில் சரியான ஒரு மதிப்பீட்டை மேற்கொள்ளல் இடம்பெறுகிறது. பின்னர் பிள்ளையின் அபிவிருத்திக்குத் தேவையான சேவைகள் தொடர்பில் நேரடி மற்றும் மறைமுக தலையீடுகள் மேற்கொள்ளப்படும்.

- **நாவின்ன சிறுவர் வழிகாட்டல் நிலையம்**

2003 ஆம் ஆண்டு மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மகரகம பிரதேச செயலகப் பிரிவு, நாவின்ன, பத்திரகொட பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த நிறுவனம் மூலம் 06 மாதம் முதல் 16 ஆண்டுகள் வரையான வயதுடைய சுமார் 80 பிள்ளைகளுக்கு வருடாந்தம் சேவை வழங்கப்படுகிறது.

- **சித்திஜய சிறுவர் வழிகாட்டல் நிலையம்**

2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆம் திகதி ஹம்பாந்தோட்டை மாவட்டம், அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவு, ஓலுவில வீதி, மல்பெத்தாவ பிரதுசத்தில் தாபிக்கப்பட்டது. கடந்த ஆண்டு இந்த நிறுவனம் மூலம் 06 மாதம் முதல் 16 ஆண்டுகள் வரை வயதுடைய 32 பிள்ளைகளுக்கு வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளது.

செயற்பாடுகள்

I. குழந்தையின் அங்கவீனத்தினை முற்கூட்டியே அடையாளங்கண்டு அது தொடர்பில் தலையீடு செய்யும் மிகவும் விளைத்திறனான திட்டங்களினை அறிமுகப்படுத்துதல்.
II. அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கு சேவைகளினை வழங்குதல் தொடர்பிலான பல்வேறு துறைகளின் சேவை வலையமைப்பினை வலுப்படுத்தல்.
III. விசேட தேவைகளைக் கொண்ட சிறார்களின் முன் பிள்ளைப் பருவக் கல்வி மற்றும் ஒன்றுதிரட்டும் கல்வியினை வலுப்படுத்தல்.
IV. பெற்றோர்கள் மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் உளத்தரத்தினை மிகவும் சிறந்த தரத்திற்குக் கொண்டு வந்து அது தொடர்பில் ஆலோசனை சேவைகளினை முன்னெடுத்தல்.

1.5.2.5 கொட்டாவ முன் வாழ்க்கைத்திறன் அபிவிருத்தி நிலையம்

14-30 வயதுக்கு இடைப்பட்ட வயதில் உள்ள இளைஞர் யுவதிகளை எதிர்காலத்தில் தொழிற் பயிற்சியில் ஈடுபடுத்துவதற்குத் தேவையான ஆரம்ப ஆயத்தப்படுத்தலை நோக்கமாக கொண்டு 2022.09.01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கொட்டாவ திறன் அபிவிருத்தி நிலையம் கொழும்பு மாவட்டம், மகரகம பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ளது. தொழிற் பயிற்சியில் ஈடுபட்ட போதும் தகைமையினைப் பெற்றுக்கொள்ளாத அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகள் மற்றும் சிறுவர் வழிகாட்டல் நிலையங்களில் அடிப்படைப் பயிற்சிகளைப் பெற்ற அங்கவீனமுற்ற சிறுவர்களின் தொழிற் பயிற்சிக்குத் தேவையான திறமைகளை அபிவிருத்தி செய்தல் இந்த நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. வருடாந்தம் சுமார் 50 அங்கவீனமுற்ற சிறுவர்களின் திறன் அபிவிருத்தியினை மேற்கொள்ளல் மற்றும் அதன் மூலம் அவர்களை தொழிற் பயிற்சியில் ஈடுபடுத்தல் எதிர்பார்க்கப்படுகிறது.

1.6 திணைக்களத்தின் கீழுள்ள நிதியம்

1.6.1 விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம்

இலங்கையில் அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பான புதிய மனோபாவ மாற்றம் 1981 ஆம் ஆண்டை சர்வதேச அங்கவீனர் தினமாக பிரகடனம் செய்யப்பட்டதனைத் தொடர்ந்து ஏற்பட்டது. அதனோடு இணைந்த வகையில் அங்கவீனமுற்ற சமுதாயத்தின் உரிமைகளினைப் பாதுகாத்தல் மற்றும் அவர்களினை வலுவூட்டுவதற்கு அரச அனுசரணையுடனான தேசிய மட்டத்தில் கொள்கைசார் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அதன் கீழ் விழிப்புலனற்ற நிலைக்குள்ளான நபர்களுக்குத் தேவையான சேவைகளினை வழங்குதல், புனர்வாழ்வளித்தல் மற்றும் நிவாரணங்களினை வழங்குவதை பணியாகக் கொண்டு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினூடாக 1992 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க "விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம்" என்ற பெயரில் சட்டமொன்று நிறைவேற்றப்பட்டு அரச வர்த்தமானி அறிவித்தலொன்றினூடாக பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் பிரகாரம், இலங்கையில் வாழும் விழிப்புலனற்ற நபர்களுக்கென பல்வேறு சேவைகளினை அமுலாக்கி, சமூக சேவைகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் தலைமையிலும் மற்றும் சமூக சேவைகள் பணிப்பாளரின் அங்கத்துவத்துடனும் குழுவொன்றினூடாக நிர்வகிக்கப்படும் இந்நிதியம், சமூக சேவைகள் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

செயற்பாடுகள்

I. விழிப்புலனற்ற நபர்கள் மற்றும் விழிப்புலனற்ற அமைப்புக்களுக்காக விளையாட்டு உதவிகளை வழங்குதல்.

II. தொழிற் பயிற்சி நடவடிக்கைகள்.
- விழிப்புலனற்ற ஆலோசகர்கள் மூலம் விழிப்புலனற்ற பயிலுனர்களைப் பயிற்றுவித்தல்

III. கல்வி மற்றும் கலாசார உதவிகள் வழங்குதல்.
- விழிப்புலனற்ற மாணவர்கள் மற்றும் விழிப்புலனற்ற பெற்றோர்களின் விழிப்புலனுள்ள பாடசலை மாணவர்களுக்கு புலமைப்பரிசில் உதவிகள் வழங்குதல்.
- விழிப்புலனற்ற, பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப்பரிசில் உதவிகளை வழங்குதல்.
- விழிப்புலனற்ற வாசகர்களுக்காக பிரேல் மொழி மூலம் வழங்கப்படும் "காலம்" சஞ்சிகைக்காக உதவி வழங்குதல்.

IV. புனர்வாழ்வு உதவிகள் வழங்குதல்
- பிற்பட்ட காலத்தில் விழிப்புலனற்ற நிலைமைக்கு ஆளாகிய நபர்களை உளரீதியாக பலப்படுத்தல் மற்றும் சமூகமயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்.
- பேச்சு புத்தக நிகழ்ச்சித் திட்டம் - விழிப்புலனற்ற நபர்களின் வாசிக்கும் உரிமையினை உறுதி செய்வதற்காக சாதாரண எழுத்தில் அச்சிடப்பட்ட நூல்களை பேச்சு நூல்களுக்கு மொழிபெயர்ப்புச் செய்தல்.
- கொவிட் தொற்றுநோய் காரணமாக நடாத்திச் செல்லப்பட்ட சுயதொழிலை கைவிட்ட அல்லது சுயதொழிலை நடாத்திச் செல்ல முடியாத நபர்களுக்காக சுயதொழில் உதவிகள் வழங்குதல்.
- விழிப்புலனற்ற நபர்களின் வீடுகளுக்கு மின்சாரம் மற்றும் குடிநீர் பெற்றுக்கொள்வதற்கு உதவி செய்தல்.
- சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு விழிப்புலனற்ற நபர்கள் அல்லது விழிப்புலனற்ற நபர்களின் அமைப்புக்கள் மூலம் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் பிரகாரம் உதவிகள் வழங்குதல்.

V. கண் வில்லைகள் மற்றும் கண் சிகிச்சைகளுக்கு உதவி செய்தல்.

VI. சர்வதேச வெள்ளைப்பிரம்பு நினைவு தின தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல்.

1.7 வெளிநாட்டு தொழில்நுட்ப உதவிகள் பெறும் கருத்திட்டங்கள்

அ) கருத்திட்டத்தின் பெயர் :- Project for Promoting Employment Support of Persons with Disabilities in Sri Lanka (ESPD)

ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம் :- ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு மன்றம்) (JICA)

இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு:- 360 மி.ரூ.
350 மி.ரூ. - ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு மன்றம்) (JICA) .தொழில்நுட்ப அறிவு ரீதியில்
இலங்கை அரசு - சமூக சேவைகள் திணைக்களம்
10 மி.ரூ.

ஈ) கருத்திட்ட காலம் :- 04 ஆண்டுகள் (2021 நவம்பர் - 2025 நவம்பர்)

அத்தியாயம் 02

முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

சமூக சேவைகள் திணைக்களத்தின் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் முன்னேற்றம்

2.1. அங்கவீனமுற்ற நபர்களுக்கான நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

சமூக சேவைகள் திணைக்களத்தினூடாக அமுலாக்கப்படும் பிரதான நிகழ்ச்சித் திட்டமாவது, அங்கவீனமுற்ற நபர்களுக்கான நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமாகும். திணைக்களப் பணிக்கூற்றினைத தழுவியதாக இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக எதிர்பார்த்த குறிக்கோள்களினை அடைவதற்கு பிரதேச மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை அமுலாக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள், செயற்திட்டங்கள் மற்றும் பல துணைச் செயற்திட்டங்கள் காணப்படுவதுடன், அவை பின்வருமாறாகும்.


- அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளினைப் புனர்வாழ்வளித்தல், வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைத்தல்.
- ஆரம்பப் பிள்ளைப் பருவத்தில் ஏற்படும் அங்கவீன நிலையினை இனங்கண்டு தேவையான தலையீடுகளினைச் செய்தல் மற்றும் மேம்படுத்துதல்.
- அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளின் ஆரம்ப தொழில்சார் திறமைகளை அபிவிருத்தி செய்தல்
- பாதுகாவலர்களற்ற மூளை வளர்ச்சி குன்றிய ஆண் பிள்ளைகளுக்கு பாதுகாப்பினை வழங்குதல்.
- சைகை மொழி மேம்பாடு
- அங்கவீனமுற்ற நபர்களுக்கான தன்னார்வ அமைப்புகளுக்கான படிகளை வழங்குதல்
- அங்கவீனமுற்ற நபர்களுக்கான சமுதாய மட்ட ஒருங்கிணைந்த அபிவிருத்தி தேசிய நிகழ்ச்சித் திட்டம்.
- விழிப்புலனற்றவர்களின் புனார்வாழ்வு நம்பிக்கை நிதியம் மூலம் விழிப்புலனற்ற சமூகத்துக்கு புனர்வாழ்வளித்தல்.
- அங்கவீனமுற்ற சிறுவர் சிறுமிகளின் விளையாட்டுக்கள் மற்றும் கலைத் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்.

2.1.1 அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல் மூலமாக புனர்வாழ்வளித்தல் மற்றும் சமூகமயப்படுத்தல்.

சமூக சேவைகள் திணைக்களம் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் முன்னுரிமை கருத்திட்டம், அங்கவீனமுற்ற இளைஞர், யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற்பயிற்சியினை வழங்குதல் ஆகும். நாடு பூராக வியாபித்துக் காணப்படும் 10 வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் ஊடாக வருடாந்தம் 500 இற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு தொழிற் பயிற்சி வழங்குதல் இடம்பெறுகிறது.

2022 ஆம் ஆண்டுக்கான புதிய பயிலுனர்களை ஆட்சேர்த்தல் மற்றும் பாடநெறி ஆரம்பம் 2021 ஆம் நவம்பர் மாதம் 11 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த கல்வி ஆண்டு தொடர்பான ஓராண்டு பாடநெறிகள் 2022 நவம்பர் மாதம் 23 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டன.

வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களின் பயிலுனர்களின் எண்ணிக்கை



கொவிட் 19 தொற்று நோய் பரவல் காரணமாக ஏற்பட்ட தாக்கத்தை தொடர்ந்து தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்கு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் குறைந்தளவு எண்ணிக்கை பயிலுனர்கள் ஆட்சேர்க்கப்பட்ட போதும் தொற்று நோய் அபாயம் படிப்படியாக குறைவடைந்ததனைத் தொடர்ந்து 2022 ஆம் ஆண்டுக்காக பயிலுனர்களை ஆட்சேர்ப்பதில் ஓர் அதிகரிப்பைக் காண முடிந்தது. தொழிற் பயிற்சி நிறுவனம் என்ற வகையில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பயிற்சி பெற்ற பயிலுனர்கள் எண்ணிக்கை ரீதியில் மட்டக்களப்பு தவிர்ந்த ஏனைய அனைத்து நிறுவனங்களிலும் அதிகரிப்பினைக் காண முடிவதுடன் அனைத்து நிறுவனங்களினதும் மொத்த எண்ணிக்கை 451 ஆகும்.

2.1.2 சிறுவர் வழிகாட்டி நிகழ்ச்சித் திட்டம்

சிறுவர் வழிகாட்டி கருத்திட்டத்தின் கீழ் திணைக்களம் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் 02 சிறுவர் வழிகாட்டி நிலையங்கள் காணப்படுகின்றன.

அவற்றுள் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு மாவட்ட சிறுவர் வழிகாட்டி நிலையமான நாவின்ன சிறுவர் வழிகாட்டி நிலையம் மூலம் வருடாந்தம் சுமார் 100 இற்கு கிட்டிய அங்கவீனமுற்ற சிறுவர்கள் சேவை பெற்றுக்கொள்கின்றனர். 2022 ஆம் ஆண்டு நிறுவனம் மூலம் சேவை வழங்கப்பட்ட மொத்த சேவை பெறுநர்கள் எண்ணிக்கை சுமார் 106 பேராக காணப்பட்டதுடன் அவர்களுள் புதிய சேவை பெறுநர்களாக பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை 51 ஆகும். இவ்வாறு சேவை பெற்றுக்கொண்ட சேவை பெறுநர்களுள் சுமார் 04 பேர் சாதாரண பாடசாலைகளுக்கும் 03 பேர் முன்பள்ளி பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளனர்.

2022 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட புதிய சேவைபெறுநர்கள் தொகை - 51 (ஆண் பிள்ளைகள்16 /பெண் பிள்ளைகள் 35)

வயது வரம்பு (வருடம்)	அங்கவீனத்தின் தன்மை									மொத்த பிள்ளைகளின் எண்ணிக்கை
	ஓட்டிசம்	பெருமூளை வாதம்	டவுன் சின்ட்றம்	வளர்ச்சியில் தாமதம்	பேச்சுக் கோளாறு	உயர் செயல்திறன்	செவிப்புலக் குறைபாடு	உளக்கோளாறு	பிற	
0 – 03	1	2	1	2	3	-	-	-	1	**10**
03 – 05	5	1	1	3	4	-	-	-	3	**17**
05 – 15	10	-	4	2	3	3	-	-	2	**24**
15 – 18	-		-	-	-	-	-	-	-	**-**
18 இற்கு மேல்	-	-	-	-	-	-	-	-	-	-
மொத்தம்	**16**	**3**	**6**	**7**	**10**	**3**	**-**	**-**	**6**	**51**

2022 வருடத்தின் மொத்த சேவைபெறுநர்கள் தொகை - 106(ஆண்கள் 76 /பெண்கள்30)

வயது வரம்பு (வருடம்)	அங்கவீனத்தின் தன்மை									மொத்தப் பிள்ளைகளின் எண்ணிக்கை
	ஓட்டிசம்	பெருமூளை வாதம்	டவுன் சின்ட்றம்	வளர்ச்சியில் காமதம்	பேச்சுக் கோளாறு	உயர் செயல்திறன்	செவிப்புலக் குறைபாடு	உளக்கோளாறு	பிற	
0 – 03	1	1	2	-	3	-	-	-	1	**08**
03 – 05	4	2	6	6	3	-	-	-	4	**25**
05 – 15	15	6	10	11	5	4	-	1	4	**56**
15 – 18	1	3	6	-	1	-	-	1	-	**12**
18 இற்கு மேல்	1	1	1	-	1	-	-	1	-	**05**
மொத்தம்	**22**	**13**	**25**	**17**	**13**	**4**	**-**	**3**	**9**	**106**

ஒவ்வொரு பிரிவின் ஊடாக வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பிலான விவரங்கள்.

வழங்கப்பட்ட சேவை	பிள்ளைகளின் எண்ணிக்கை	தடைவைகளின் எண்ணிக்கை
உடற்பயிற்சிச் சிகிச்சை	75	225
பேச்சுப் பயிற்சிச் சிகிச்சை	66	241
தொழிற் பயிற்சி சிகிச்சை	21	24
கல்வி மற்றும் ஆரம்பகாலத் தொழிற் பயிற்சி	106	3263

சிறுவர் வழிகாட்டி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாவின்ன சிறுவர் வழிகாட்டி நிலையத்தை முன்மாதிரியாக கொண்டு 2022 ஆம் ஆண்டு சனவரி மாதர் 25 ஆம் திகதி "சித்திஜய" எனும் பெயரில் அம்பாந்தோட்டை மாவட்ட சிறுவர் வழிகாட்டி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. அந்த நிறுவனம் மூலம் ஏற்புடைய ஆண்டு சுமார் 32 அங்கவீனமுற்ற சிறுவர்களுக்கு சேவை வழங்கப்பட்டுள்ளது. இந்த சேவை பெறும் சிறுவர்களுள் 03 பேரை சாதாரண பாடசாலைகளுக்கும் 03 பேரை முன்பள்ளி பாடசாலைகளுக்கும் அனுப்புவதற்கு தேவையான வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளது.

2022 வருடத்தின் மொத்த சேவைபெறுநர்கள் தொகை - 32 (ஆண்கள் 22 /பெண்கள்10)

வயது வரம்பு (வருடம்)	அங்கவீனத்தின் தன்மை									மொத்தப் பிள்ளைகளின் எண்ணிக்கை
	ஓட்டிசம்	பெருமூளை வாதம்	டவுன் சின்ட்ரம்	வளர்ச்சியில் காமகம்	பேச்சுக் கோளாறு	உயர் செயல்திறன்	செவிப்புலக் குறைபாடு	உளக்கோளாறு	பிற	
0 – 03	-	01	01	-	02	-	-	-	-	**04**
03-05	02	-	05	03	03	01	-	01	04	**19**
05-15	01	-	02	-	01	04	-	01	-	**09**
மொத்தம்	**03**	**01**	**08**	**03**	**06**	**05**	**-**	**02**	**04**	**32**

2.1.3 ஆரம்ப தொழில் திறமைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்

14 - 30 வயதுப் பிரிவில் உள்ள இளம் வயது அங்கவீனமுற்ற சிறுவர்கள் பயிற்சியை தொடர்வதற்கு தேவையான அடிப்டைத் திறமைகளை அபிவிருத்தி செய்து தொழிற் பயிற்சி நிறுவனங்களில் சேர்ப்பதற்குத் தேவையான ஆரம்ப ஆயத்தப்படுத்தலை நோக்கமாக கொண்டு 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கொட்டாவ ஆரம்ப தொழில் திறன் அபிவிருத்தி நிலையம் மூலம் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கடந்த 04 மாதங்களுக்குள் 39 அங்கவீனமுற்ற சிறுவர்களுக்குத் தேவையான சேவை வழங்கப்பட்டுள்ளது.

2022 வருடத்தில் சேவை வழங்கப்பட்ட மொத்த சேவைபெறுநர் எண்ணிக்கை

வயது வரம்பு (வருடம்)	அங்கவீனத்தின் தன்மை									மொத்தப் பிள்ளைகளின் எண்ணிக்கை
	ஓட்டிசம்	பெருமூளை வாதம்	டவுன் சின்ட்ரம்	வளர்ச்சியில் காமகம்	பேச்சுக் கோளாறு	உயர் செயல்திறன்	செவிப்புலக் குறைபாடு	உளக்கோளாறு	பிற	
14-20	3	9	4	1	1	1	5	-	1	**25**
21-25	2	1	1	-	-	3	-	1	-	**08**
26-30	-	2	2	-	-	-	-	-	-	**04**
30 இற்கு மேல்	-	2	-	-	-	-	-	-	-	**02**
மொத்தம்	**05**	**14**	**07**	**01**	**01**	**04**	**05**	**01**	**01**	**39**

வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பான தகவல்கள்

தொடர் இல.	செயற்பாடுகள்	துணைச் செயற்பாடுகள்
01	சுய உதவி திறன் அபிவிருத்தி	• உணவு உட்கொள்ளல், ஆடை அணிதல், உணவு சமைத்தல், மலசலகூடத்தை பயன்படுத்தல், தனிப்பட்ட சுகாதாரம், பொதுச் சூழலில் நடத்தை
02	சூழல் செயற்பாடுகள்	• விவசாயம் (நாற்று பயிச்ரச்செய்கை), சிறமதானம், சூழல் அலங்காரம், மழர் நடுகை
03	தலைப்பினை அடிப்படையாக கொண்ட எண்ணக்கருக்கள்	• சரியான எழுத்து எழுதுதல், வசன உச்சரிப்பு, பல்வேறு எண்ணக்கருக்களைப் புரிதல்
04	தலைப்பினை அடிப்படையாக கொண்ட செயற்பாடுகள்	• தலைப்புக்கு ஏற்ற படைப்புகளை தயாரிக்கும் செயற்பாடுகள் • மொத்த மற்றும் நுட்பமான திறன்களை அபிவிருத்தி செய்யும் கைவினைச் செயற்பாடுகள்
05	சமூக திறமைகள்	• சமத்துவ விருத்தி, ஒற்றுமை மேம்பாடு, போக்குவரத்து பற்றிய புரிதல்
06	ஆளுமை விருத்தி	• தலைமைத்துவ திறன், விளையாட்டுத் திறன் விருத்தி, உடல் ஆரோக்கியம்
07	நுண்கலை ஆற்றல் அபிவிருத்தி	• பாட்டுப் பாடல், இசை, நாட்டியம், சித்திரம் வரைதல்
08	ஆன்மீக அபிவிருத்தி	• தியான நிகழ்ச்சிகள், ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்கள்

2.1.4 தன்னார்வ அமைப்புக்களுக்கான கொடுன்வுகள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டம்

அங்கவீனமுற்ற நபர்களுக்கு சேவை வழங்குவதற்காக நாடு பூராகவும் நடைமுறைப்படுத்தப்படும் தன்னார் நிறுவனங்கள் மூலம் (தொழிற் பயிற்சி நிறுவனங்கள், திறன் அபிவிருத்தி நிலையங்கள், விசேட அலகுகள்) தெரிவு செய்யப்பட்ட சில அமைப்புக்களுக்காக சமூக சேவைகள் திணைக்களம் மூலம் கொடுப்பனவுகள் வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் கொடுப்பனவுகள் நிறுவனத்தின் தன்மை, தேவைப்பாடு மற்றும் கோரிக்கை ஆகியவற்றின் பிரகாரம் பயிலுனர் கொடுப்பனவுகள், பராமரிப்பு கொடுப்பனவு, பங்கேற்றல் கொடுப்பனவு, ஆசியரியர் கொடுப்பனவு, உபசரிப்பு கொடுப்பனவு, போக்குவரத்து கொடுப்பனவு மற்றும் விடுதி கொடுப்பனவு என பல்வேறு வடிவம் பெறும். 2022 ஆம் ஆண்டு மேற் குறிப்பிடப்பட்ட ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கொடுப்பனவுகளை வழங்கிய 27 தன்னார்வ அமைப்புகள் காணப்பட்டதுடன் அவ் ஒவ்வொரு நிறுவனத்துக்காகவும் வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பான விபரம் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

தன்னார்வ அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டகொடுப்பனவுகளின் எண்ணிக்கை

தொடர் இல.	தன்னார்வ அமைப்புகள்	பயிலுனர் படி (ரூ. 75/-)	பங்கேற்பு படி (ரூ. 100/-, ரூ. 150/-)	ஆசிரியர் படி (ரூ.10,000/-)	உபசரிப்பு படி (ரூ. 50/- ,ரூ.75/-)	போக்குவரத்துப் படி (ரூ.25/)	விடுதி க்கான படி (ரூ..75/-)
01	திறன் அபிவிருத்தி நிலையம் - மாலமுல்ல			02			
02	சிறுவர் வழிகாட்டல் நிலையம் - கெட்டுவான		17	02	17		
03	லிட்ல் ப்ளவர் விசேட சிறுவர் அபிவிருத்தி நிலையம் - படல்கும்புர		18	02			
04	விசேட கல்வி அபிவிருத்தி நிலையம் - இப்பாகமுவ		14	01	14		
05	சிறுவர் திறன் அபிவிருத்தி நிலையம், அக்மீமன			01			
06	ரியன்சி அலகியவன்ன தொழிற் பயிற்சி நிறுவனம் தொழிற் பயிற்சி நிறுவனம் - பட்டுகம்மன	08					
07	மூளை வளர்ச்சி குன்றிய பெண்கள் புனர்வாழ்வு நிலையம் - ரொட்டுவ						32
08	தேசிய உளவியல் சுகாதார சபை - சஹனய கொழும்பு				12	12	
09	ரிட்டிகஹயாய மகா வித்தியாலயம், கட்டுவன			01			
10	கட்டுவன ஆரம்ப பாடசாலை, கட்டுவன			01			
11	அருனெல்ல விசேட பாடசாலை - வீரகெட்டிய			02			
12	திறன் அபிவிருத்தி நிலையம் - ராஜாங்கனை		25	02			
13	செனெஹச சிறுவர் திறன் அபிவிருத்தி நிலையம், சூரியவெவ			01			
14	சிறுவர் திறன் அபிவிருத்தி நிலையம், பொல்பித்திகம		15	02	15		
15	“அபே தருவோ” திறன் அபிவிருத்தி நிலையம், குருவிட்ட			02			
16	விசேட கல்வி அலகு, தெல்தொட்டை			02			
17	சஹன செவன, சேருவில			02			
18	சமனல பியச உளவியல் சுகாதார அலகு, ஹப்புத்தளை			02			
19	பெத்தும் உயன நிலையம், மொரட்டுவ			02			
20	வோல்ரீம் திறன் அபிவிருத்தி நிலையம், நுவரெலியா			03			
21	பெந்தர ஸ்ரீ குணானந்த தேரர் ஞாபகார்த்த திறன் அபிவிருத்தி நிலையம் - கெஸ்பேவ			02			
22	திரிய பிள்ளைகள் மறுவாழ்வு மற்றும் திறன் அபிவிருத்தி நிலையம் - மல்லவபிட்டி			01			
23	சிறுவர் வழிகாட்டல் நிலையம் - குளியாபிட்டி மேற்கு			01			
24	ரத்தொட்ட சவிய திறன் அபிவிருத்தி நிலையம் - கைகாவல		15	01	15		
25	தம்புத்தேகம திரிய திறன் அபிவிருத்தி நிலையம் - தம்புத்தேகம			01		27	


மேற் குறித்த படிகளுக்கு மேலதிகமாக 2022 ஆம் ஆண்டு காத்தான்குடி சுவர்ணதாம நிறுவனத்துக்காக ரூ.60,000/- மற்றும் ராஜகிரிய தேசிய செவிப்புலக் குறைபாட்டு சேவை நிலையத்துக்காக ரூ.40,000/- தொகை வழங்கப்பட்டுள்ளது.

2.1.5 பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர் அற்ற மூளை வளர்ச்சி குன்றிய ஆண் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பினை வழங்கும் செயற்திட்டம்

சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் மற்றுமொரு முக்கிய நிகழ்ச்சித் திட்டம் யாதெனில் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களை இழந்த பல்வேறு வயதுப் பிரிவில் உள்ள மூளை வளர்ச்சி குன்றிய ஆண் பிள்ளைகளுக்கு பாதுகாப்பு வழங்குதல் ஆகும். இதற்காக திணைக்களத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் புவக்பிட்டி "ஜயவிரு செவன" நிறுவனம் மூலம் 75 இற்கும் அதிகமான சேவை பெறுநர்களுக்கு வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பு வழங்கப்படுகிறது.

2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் ஆரம்பமாகும் போது 76 சேவை பெறுநர்களுக்கு பாதுகாப்பு வழங்கி நிறுவனம் நடாத்தப்பட்டு வந்ததுடன் பெப்ரவரி மாதம் நபர் ஒருவர் நிறுவனத்தை விட்டுச் செல்லல் மற்றும் ஏப்ரல் மாதம் புதியதொரு சேவை பெறுநர் சேர்க்கப்படல் இடம்பெற்றதுடன் டிசம்பர் மாத இறுதியில் அலுவலர் ஒருவர் மரணித்ததை தொடர்ந்து ஆண்டிறுதியளவில் மொத்த சேவை பெறுநர்கள் சுமார் 75 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டு மொத்தமாக 75 சேவை பெறுநர்களுக்கு உணவு, வதிவிடம், மருத்துவ மற்றும் துப்பரவேற்பாட்டு வசதிகளை வழங்கி பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அங்கவீனத் தன்மையின் பிரகாரம் பாதுகாப்பு வழங்கப்பட்ட பிள்ளைகள்



மேற்குறித்த வரைபின் பிரகாரம் நோக்கும் போது 2022 ஆம் ஆண்டு பாதுகாப்பு பெற்ற சேவை பெறுநர்களுள் சுமார் 81% உயர்வான பெறுமதியினை மூளை வளர்ச்சி குன்றிய அங்கவீனமுற்ற நபர்களாக காணப்படுவதுடன் அதற்கடுத்ததாக முறையே ஆகக்கூடிய பெறுமதியை பிரதிநிதித்துவம் செய்வது மன நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் ஆகும். செவிப்புல மற்றும் பேச்சுக் குறைபாடுள்ள நபர்கள் மற்றும் பார்வைக் குறைபாடுள்ள நபர்கள் சம அளவில் காணப்படுவதுடன் ஏனைய அங்கவீன நிலைமைகளை (அசைவு மற்றும் நானாவித) பிரதிநிதித்துவம் செய்யும் நபர்கள் மொத்த சேவை பெறுநர்ளுள் 3% மட்டமாக அமைந்தது.

வயதுப் பிரிவின் பிரகாரம் நிறுவனத்திடம் பாதுகாப்பு பெற்ற நபர்களுள் ஆகக் கூடுதலான அளவினை 31-50 வயதுக்கு இடைப்பட்ட இடைநிலை வயது மட்டத்தில் உள்ள நபர்கள் பிரதிநிதித்துவம் செய்கிறார்கள். எண்ணிக்கை ரீதியில் பார்க்கும் போது அவ் எண்ணிக்கை 41

ஆகும். 18 - 30 வயதுப் பிரிவில் உள்ள இளைஞர்கள் சுமார் 18 ஆக காணப்பட்டதுடன் சேவை பெறுநர்களுள் ஆகக் கூடிய தொகை 51 வயதுக்கு மேற்பட்ட நபர்கள் என்பதுடன் அது எண்ணிக்கை ரீதியாக சுமார் 16 ஆக காணப்பட்டது.

2.1.6 சைகை மொழி மேம்பாடு

அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சமூக சேவைகள் திணைக்களம் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் மற்றுமொரு கருத்திட்டம் யாதெனில் கேட்டல் குறைபாடுள்ள நபர்களுக்கு சேவை வழங்குதல் ஆகும். செவிப்புல மற்றும் பேச்சுக் குறைபாடுள்ள சமூகத்தின் தொடர்பாடலை இலகுபடுத்தி அவர்களுக்கு மிகவும் பயனுள்ள சேவையினை வழங்குவதற்காக சைகை மொழியை அங்கீகரிக்கப்பட்ட மொழியாக ஏற்றுக் கொள்ளல் மற்றும் மேம்படுத்தும் நோக்கில் 2022 ஆம் ஆண்டு பல நிகழ்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

- சைகை மொழிபெயர்ப்பு சேவையை நாடளாவிய ரீதியில் பரப்புவதற்காக 28 நபர்களைக் கொண்ட சைகை மொழிபெயர்ப்பாளர்களின் ஒதுக்கு ஒன்றை தாபித்தல்.
- சர்வதேச சைகை மொழித் தினத்துடன் இணைந்த வகையில் சைகை மொழி நினைவு தினக் கொண்டாட்டத்தை நடாத்துதல் மற்றும் சைகை மொழிபெயர்பாளர்களின் சேவையை பாராட்டுதல்.
- செவிப்புலக் குறைபாடுள்ள நபர்களின் அடையாளத்தை உறுதி செய்வதற்காக 121 செவிப்புலனற்ற நபர்களுக்கான அடையாள அட்டைகளை வழங்குதல்.

அங்கவீனமுற்ற நபர்களுக்கான நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம்
செலவுத் தலைப்பு 216 - 02- 03 - 1- 1501 (2022/12/31 ஆந் திகதியன்று)

தொ. இல.	செயற்பாடுகள் மற்றும் பௌதீக முன்னேற்றம்	செலவு ரூபா.
01.	தொழிற் பயிற்சி, திறன் அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் சிறுவர் வழிகாட்டி நிலையங்களுக்காக சேவை வழங்குதல் I. மூலப்பொருட்கள் II. பிற நலன்புரிச் செலவுகள் III. ஆலோசனைப் பயிற்சிக் கொடுப்பனவுகள் IV. கல்விச் சுற்றுலாக்கள்	14,460,000.00
02.	திணைக்களத்தின் கீழ் நிதி அனுசரணை பெறும் தன்னார்வ அமைப்புக்களின் பராமரிப்பு மற்றும் உதவி வழங்கல் I. செவிப்புல குறைபாடுடையோர் சேவை சபை II. சுவர்ணதாம மன்றம் III. மாலமுல்ல செத்சரண அபிவிருத்தி நிலையம்	190,000.00
03.	அங்கவீனமுற்ற நபர்களுக்கு சேவை வழங்கும் தன்னார்வ அமைப்புக்கள், முன்பள்ளிகள், சிறுவர் வழிகாட்டல் நிலையங்கள்,	5,910,000.00

	திறன் அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்களின் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் கொடுப்பனவு வழங்குதல். I. வீரகெட்டிய அருணல்ல விசேட பாடசாலை - 02 ஆசிரியர்கள் II. ஹ/கட்டுவன ரிட்டிகஹயாய முன் பள்ளி - 01 ஆசிரியர் III. கட்டுவன ஆரம்ப பாடசாலை, கட்டுவன - 01 ஆசிரியர் IV. படல்கும்புர லிட்ல் ப்ளவர்ஸ் சிறுவர் திறன் அபிவிருத்தி நிலையம் - 02 ஆசிரியர்கள் V. இப்பாகமுவ வசேட கல்வி நிலையம் - 01 ஆசிரியர் VI. மாலமுல்ல சிறுவர் திறன் அபிவிருத்தி நிலையம் - 02 ஆசிரியர்கள் VII. சிறுவர் திறன் அபிவிருத்தி நிலையம் - அக்மீமன - 01 ஆசிரியர் VIII. சிறுவர் திறன் அபிவிருத்தி நிலையம் - கெட்டுவான - 02 ஆசிரியர்கள் IX. சஹன செவன சேருவில - 02 ஆசிரியர்கள் X. மனநோய் சுகாதாரப் பிரிவு - ஹப்புத்தளை - 02 ஆசிரியர்கள் XI. விசேட கல்வி அலகு, தெல்தோட்டை, - 02 ஆசிரியர்கள் XII. அபே தருவோ திறன் அபிவிருத்தி நிலையம் - குருவிட்ட - 02 ஆசிரியர்கள் XIII. வோல்ரீம் திறன் அபிவிருத்தி நிலையம் - நுவரெலியா 03 ஆசிரியர்கள் XIV. பெத்தும் உயன நிலையம், மொரட்டுவ - 02 ஆசிரியர்கள் XV. சென்ஹச சிறுவர் திறன் அபிவிருத்தி நிலையம், சூரியவெவ - 01 ஆசிரியர் XVI. சிறுவர் திறன் அபிவிருத்தி நிலையம், பொல்பித்திகம - 02 ஆசிரியர்கள் XVII. திறன் அபிவிருத்தி நிலையம், ராஜாங்கனை - 02 ஆசிரியர்கள் XVIII. பெந்தர ஸ்ரீ குணவர்தன தேரர் ஞாபகார்த்த திறன் அபிவிருத்தி நிலையம், கெஸ்பேவ - 02 ஆசிரியர்கள் XIX. மல்லவபிட்டி திரிய தரு புனர்வாழ்வு மற்றும் திறன் அபிவிருத்தி நிலையம் - 01 ஆசிரியர் XX. குளியாபிட்டி மேற்கு சிறுவர் வழிகாட்டி நிலையம் - 01 ஆசிரியர் XXI. ரத்தொட்ட சவிய திறன் அபிவிருத்தி நிலையம், கைகாவல - 01 ஆசிரியர் XXII. தம்புத்தேகம திரிய திறன் அபிவிருத்தி நிலையம், தம்புத்தேகம - 01 ஆசிரியர் XXIII. இணைந்த தொழிற் பயிற்சி நிலையம், தோலங்கமுவ - 03 ஆசிரியர்கள் XXIV. சித்திஜய சிறுவர் வழிகாட்டல் நிலையம் - 04 ஆசிரியர்கள்	
04.	தொழிற் பயிற்சி நிலைய சீருடைகள் - ரீ சேர்ட், பொட்டம்	460,000.00
05.	டிஜிட்டல் பொசொன் வலய போட்டிகளை நடாத்துதல்	100,000.00
	மொத்த செலவுகள்	**21,120,000.00**
	ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு	**25,800,000.00**

அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரி நிகழ்ச்சித் திட்டம் பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம்

செலவுத் தலைப்பு 216-02-03-13 – 1501 (2022/12/31 ஆந் திகதியன்று)

தொ.இல.	செயற்பாடுகள்	ஒதுக்கீடுகள் ரூபா.	செலவு ரூபா.
01.	திணைக்களத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டுவரும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களின் அங்கவீனமுற்ற பயிலுனர்கள் 451 பேருக்கு பயிலுனர் கொடுப்பனவுகள் (ஒரு பிள்ளைக்கு ரூபா. 150/-)	21,000,000.00	20,720,000.00
02.	திணைக்களத்தின் நிதி அனுசரணை கிடைக்கப் பெறும் தன்னார்வத் அமைப்புக்களின் 227 சேவை பெறுநர்களுக்காக பயிலுனர் கொடுப்பனவு வழங்குதல்		

அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரி நிகழ்ச்சித் திட்டம் பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம்

செலவுத் தலைப்பு 216-02-03 - 1203 (2022/12/31 ஆந் திகதியன்று)

தொ.இல.	செயற்பாடுகள்	ஒதுக்கீடுகள் ரூபா.	செலவு ரூபா.
01	வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களின் உணவுக்கான கொடுப்பனவு மற்றும் விடுதிக் காப்பாளர், பராமரிப்பு உத்தியோகத்தர்களுக்கு சீருடைக் கொடுப்பனவினை வழங்குதல்.	50,200,000.00	49,790,000.00

2.1.7 அங்கவீனமுற்ற பிள்ளைகளின் கலாசார மற்றும் கலைத்திறன் விருத்தி செயற்திட்டம்

சமூக சேவைகள் திணைக்களம், அங்கவீனமுற்ற சிறுவர் சிறார்களின் தொழில்வாண்மை இயலுமைகளினை வலுவூட்டுவதை முன்னெடுத்து வருவதுடன், அவர்களினை, அழகான ஆரோக்கியம் நிறைந்த சுறுசுறுப்பான நபர்களாக சமூகத்துடன் ஒன்றிணைப்பதற்கு பிரதானமாக நடவடிக்கை எடுத்து வருகின்றது. அது தொடர்பில் நாட்டின் சகல அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளினைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடியவாறு அவர்களின் விளையாட்டுகள் மற்றும் கலைத் திறன்களினை மாவட்ட மட்டத்தில் இனங்கண்டு ஒவ்வொரு வருடமும் தேசிய விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சியினை நடாத்துதல் இடம்பெற்று வருகின்றது. மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டும் நபர்கள் மற்றும் குழுக்கள் தேசிய மட்டப் போட்டிகளுக்கு முன்வைப்பதும், அதன் பின்னர் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள், விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்குவதும் இடம்பெறுகின்றது.

இலங்கையின் கலாசார பழக்கவழக்கங்கள் தொடர்பில் உயிரோட்டமான அனுபவத்தினை அனுபவிக்கும் வாய்ப்பினை அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கு வழங்குதல், மற்றவர்களிடையே அவர்களின் விளையாட்டு மற்றும் நடனம் மீது காணப்படும் திறனை மேம்படுத்துதல், அங்கவீனமுற்ற சமுதாயம் தொடர்பில் சமூகத்தில் நிலவும் பாரம்பரிய தவறான மனப்பாங்குகளினை மாற்றுதல் மற்றும் அவர்களினை சமூக ரீதியாக ஏற்றுக் கொள்ள வைப்பதும் இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் கீழ் அமுலாக்கப்படும் பிரதான தேசிய நிகழ்ச்சித் திட்டங்கள் 03 ஆகும்.

i. அங்கவீனமுற்ற பிள்ளைகளின் தேசியக் கலை நிகழ்ச்சி - "சித் றூ"
ii. அங்கவீனமுற்ற நபர்களின் தேசிய தடகள விளையாட்டு விழா
iii. அங்கவீனமுற்ற பிள்ளைகளின் புத்தாண்டு விழா

COVID 19 தொற்றுநோய் காரணமாக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக அங்கவீனமுற்ற சிறுவர்கள், பெற்றோர்கள் மற்றும் பெருந் தொகையான அலுவலர்களின் பங்கேற்பில் நடாத்தப்படும் சித்ரூ கலைநிகழ்ச்சி மற்றும் மெய்வல்லுனர் விளையாட்டு விழாவை 2022 ஆம் ஆண்டு நடாத்த முடியவில்லை.

திணைக்களத்தினூடாக தேசிய ரீதியில் விளையாட்டுப் போட்டி நடாத்தப்படாத போதும் மாவட்ட மட்டத்தில் போட்டிகளை நடாத்தி அப் போட்டிகளில் வெற்றியீட்டிய அங்கவீனமுற்ற வீர வீராங்கணைகளை தேசிய பெராலிம்பிக் போட்டிகளுக்கு அனுப்பி 09 தேசிய மட்ட வெற்றிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அதன் மூலம் அங்கவீனமுற்ற நபர்களின் விளையாட்டுத் திறமைகளை தேசிய மட்டத்துக்கு கொண்டு வருவதற்கும் முடிந்தது.

முன்னைய ஆண்டைப் போலவே அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கான சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா, சிறுவர் வழிகாட்டல் நிலையம் மற்றும் தொழிற் பயிற்சி நிறுவன மட்டத்தில் நடாத்தப்பட்டது.

2022 ஆம் ஆண்டு பொசொன் விழாவோடு இணைந்ததாக "பொசொன் கொண்டாட்டம் அல்லது மஹிந்தவின் வருகை காரணமாக ஏற்பட்ட மத ரீதியான மற்றும் கலாசார ரீதியான மறுமலர்ச்சி" என்ற தொனிப் பொருளில் தொழிற் பயிற்சி நிறுவனங்களின் பயிலுனர்கள் மற்றும் சிறுவர் வழிகாட்டல் நிலையங்களின் பிள்ளைகளுக்காக டிஜிட்டல் பொசொன் வலயம் நடாத்தப்பட்டது. இங்கு 04 பிரிவுகளின் கீழ் போட்டிகளை நடாத்தி கலந்து கொண்ட அனைத்து சிறுவர்களுக்கும் சான்றிதழ்களும் வெற்றியீட்டிய சிறுவர்களுக்கு பரிசுகளும் வழங்கி வைத்தல் மேற்கொள்ளப்பட்டது.

2.1.8 சமுதாய மட்டத்திலான புனர்வாழ்வுத் தேசிய நிகழ்ச்சித் திட்டம் (சீ.பீ.ஆர்.)

அங்கவீனமுற்ற நபர்களின் தேசியக் கொள்கைக்கமைய, அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து பொறுப்புக்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதற்கு இயலுமானவாறு அவர்களின் அறிவு மற்றும் திறமைகளை வலுவூட்டுதல் பிரதானமாக இடம்பெறுகின்றது. அதே போல அச்சமுதாயத்தின் குடும்ப அங்கத்தவர்களின் பொருளாதாரம் மற்றும் அங்கத்துவத்தினை சிறந்தவாறு முன்னெடுப்பதை உறுதிப்படுத்தும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களும் இதன் கீழ் அமுலாக்கப்படுகின்றது.

சமுதாய மட்டத்திலான புனர்வாழ்வுத் தேசிய நிகழ்ச்சித் திட்டம் - நிதிசார் மற்றும் பௌதிக முன்னேற்றம்

செலவுத் தலைப்பு 216 -02 -03 -5 – 2509 (2022/12/31 ஆந் திகதியன்று)

செயற்திட்டம்	நிகழ்ச்சித் திட்டம்	பௌதிக முன்னேற்றம்	மதிப்பீடு ரூ.மி.	செலவு ரூ.மி.
சமுதாய மட்டத்திலான புனர்வாழ்வுத் தேசிய நிகழ்ச்சித் திட்டம் (சி.பி.ஆர்)	அடி மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை சுவசக்தி அமைப்புக்களினைப் பாராட்டுதல் - "சுவபிமானி" தேசிய விருது வழங்குதல்	மாவட்ட மட்டத்தில் 24 போட்ட மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.	10.50	0.51
	அங்கவீனமுற்ற சமுதாயத்திற்கு நேரடி உதவி வழங்குதல்	நேரடி உதவிகள் (139) •கொமட் மலசலகூடம் 26 •மின்சார வசதிகள்-13 •பிரவேச வீதி வசதிகள் - 07 •வாயு மெத்தை வழங்குதல் - 20 •நீர் மெத்தை வழங்குதல் - 10 •நீர் வசதிகள் - 46 •ஏனைய உபகரணங்கள் மற்றும் உதவிகள் - 17		2.46
	சுயசக்தி குழுக்களின் உற்பத்தி சந்தைப்படுத்தல் கண்காட்சி	உற்பத்திக்கான இலட்சினை அறிமுகம் செய்தல் மற்றும் பதிவுசெய்தல்		0.01
	மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் முன்னேற்ற மீளாய்வு மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்துதல்	தேசிய நிகழ்ச்சிகள்-04 மாவட்ட - 104 பிரதேச - 1180		1.59
	அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்	01 பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்		0.76
	நடைமுறைத் தேவைகளுக்காக படைப்பாற்றல் கொண்ட நிகழ்ச்சிகள் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்	கருத்திட்டங்கள் - 17		0.95
	நிர்வாக மற்றும் ஏனைய செலவுகள்	சீ.பீ.ஆர். பிரிவின் தொலைபேசிப் பற்றுச்சீட்டுக்கள், எழுதுகருவி, எரிபொருள் மற்றும் பிற பொதுச் செலவுகள்		0.25
மொத்தம்			**10.50**	**6.54**

2.1.9 விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம்

பார்வையற்ற நபர்களுக்கு தேவையான சேவைகளினை வழங்குதல், மறுவாழ்வளித்தல் மற்றும் நிவாரணங்களினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, நாடுபூராவும் வியாபித்துள்ள பார்வையற்ற சமுதாயத்திற்கும் மற்றும் அவர்களின் குடும்பங்களின் நலன்புரிக்கென பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் இதன் கீழ் இடம்பெறுகிறது. அதன் பிரகாரம், 2022 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அதன் மூலம் அடைந்துகொண்ட பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம் பின்வருமாறு.

விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம் - நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

செலவுத் தலைப்பு 216-02-03-3-1508 (2022/12/31 ஆந் திகதியன்று)

தொ. இல.	நிகழ்ச்சித் திட்டம்	பௌதீக முன்னேற்றம்	மதிப்பீடு ரூபா	செலவு ரூபா
01	விளையாட்டு உதவிகள்	12 பாடசாலைகள்	35,000.00	30,000.00
02	தொழிற் பயற்சி	05	300,000.00	235,000.00
03	**கல்வி மற்றும் கலாசார உதவிகள்**		5,133,540.00	5,279,586.00
	I. விழிப்புலனற்ற பாடசாலை மாணவர்கள் மற்றும் விழிப்புலனற்ற பல்கலைக்கழக மாணவர்களுக்காக புலமைப் பிரிசில் உதவி வழற்குதல்	389		
	II. காலம் சஞ்சிகைக்காக உதவி வழங்குதல் (வலயம்)	12		
04	**புனர்வாழ்வு உதவிகள்**		1,373,000.00	1,000,457.50
	I. பேச்சுப் புத்தகம்	18000 பக்கங்கள்		
	II. ஆலோசனைக் கொடுப்பனவு	05		
	III. பயிலுனர்களுக்கான மாணவர் கொடுப்பனவு	19		
	IV. சுயதொழில் உதவிகள்	07		
05	கண்வில்லைகள் மற்றும் கண் சிகிச்சை	கண்வில்லை - 01	100,000.00	17,500.00
06	வெள்ளைப்பிரம்பு தின தேசிய நினைவுதின விழா	01	1,070,110.00	1,070,110.00
06	கணக்காய்வுக் கட்டணம்		138,000.00	138,000.00
07	நிதிச் செலவுகள்		10,000.00	4,758.65
08	நானாவித செலவுகள்		24,500.00	23,869.00
09	நிர்வாக செலவுகள்		815,350.00	833,438.49

2.2. போதைப்பொருளுக்கு அடிமையானவர்களினைப் புனர்வாழ்வளித்தல் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைக்கும் கருத்திட்டம்.


போதைப்பொருளுக்கு அடிமையானவர்களினைப் புனர்வாழ்வளித்தல், சமூகத்துடன் ஒன்றிணைத்தல் மற்றும் தொழில்வாண்மையான இயலுமைகளினை மேம்படுத்துதலை நோக்கமாக கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக ஹெரோயின், கஞ்சா, கேரளா கஞ்சா. மதுசாரம், போதை மாத்திரை மற்றும் ஏனைய போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை நிறுவனமயப்படுத்தி புனர்வாழ்வு செயன்முறையில் சேர்த்துக் இடம்பெறுகின்றது.

நிறுவனத்திற்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் உள சிகிச்சை, உளவியல் உளவளத்துணை மூலோபாயங்கள் மற்றும் மருத்துவ உளவியல் அணுகுமுறைகளினூடாக புனர்வாழ்வுச் செயற்பாடுகளுக்கு அனுப்புதல் பிரதானமாக இடம்பெறுகின்றது. அக்காலத்தினுள் பயிலுனர்களின் ஆன்மீகம்சார் வளர்ச்சி தொடர்பில் யோகாசனம் மற்றும் கலாசார நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. பயிலுனர்களைப் புனர்வாழ்வளிக்கும் காலத்தினுள் விடுதி வசதிகள், உணவு பானங்கள் மற்றும் மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படும். பயிலுனர்களின் வாழ்வாதார வழிகளை மேம்படுத்துதற்குத் தேவையான தொழில்வாண்மையான இயலுமைகளை மேம்படுத்தும் பயிற்சியும் விடுதியிலுள்ள காலத்தினுள் வழங்கப்படும்.

2022 ஆம் ஆண்டு துவக்கத்தில் (2021 ஆண்டு ஆட்சேர்த்தல்) 38 சேவை பெறுநர்களுக்காக புனர்வாழ்வு சேவை வழங்கல் மேற்கொள்ளப்பட்டதுடன் 2022 ஆம் ஆண்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தல் மூலம் 32 மற்றும் சுயமாக 40 என பல்வேறு போதைப் பொருட்களுக்கு அடிமைப்பட்ட சுமார் 72 நபர்கள் புதிதாக நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ளார்கள். அதன் பிரகாரம் ஆண்டில் மொத்தமாக 110 சேவை பெறுநர்களுக்காக நிறுவனம் மூலம் புனர்வாழ்வு சேவை வழங்கப்பட்டுள்ளதுடன் அதில் 67 பேர் புனர்வாழ்வு பெற்ற நபர்களாக சமூகமயப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

2022 ஆம் ஆண்டு நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக மற்றும் மற்றும் புனர்வாழ்வு செயன்முறையை மிகவும் வெற்றியடையச் செய்யும் நோக்கில் சுயமாக முன்வரும் சேவை பெறுநர்களின் புனர்வாழ்வுக் காலஎல்லையை 06 மாதங்கள் வரை நீடிப்புச் செய்தல் காரணமாக முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது புதிதாக சேவை பெறுநர்களை சேர்த்துக் கொள்வதில் வீழ்ச்சியை காணக் கிடைத்தது. அது பின்வரும் வரைபு மூலம் தெளிவாகிறது.

புனர்வாழ்வு பெற்ற நபர்கள் எண்ணிக்கை - 2018-2022 நிறுவனத்திற்குள் சேர்த்துக்



கொள்ளப்பட்டு புனர்வாழ்வளிக்கப்படும் அதே நேரம் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் சமூக போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்களும் இதன் கீழ் அமுலாக்கப்படுகின்றது.

போதைக்கு அடிமையான நபர்களுக்கு புனர்வாழ்வளித்தல் மற்றும் சமூகமயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் 216- 02-03-2-1501 – (2022/12/31) இல்

செயற்பாடு	ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ.)	நிதி முன்னேற்றம் (ரூ.)	பௌதீக முன்னேற்றம்
சமூக போதை தடுப்பு நிகழ்ச்சித் திட்டம் (மாவட்ட மற்றும் பிரதேச மட்ட)	1,150.000.00	694,355.00	07 மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களை இலக்காக கொண்ட சமூகத்தை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்

2.3 அங்கவீனமுற்ற சமூகத்துக்கான தொழில் உதவி மேம்பாட்டுக்கான கருத்திட்டம்

இலங்கையில் அங்கவீனமுற்ற நபர்களுக்காக நிலவும் தொழில் வாய்ப்பு குறைவாக உள்ளதன் காரணமாக அவர்களிடம் பொருளாதார அபிவிருத்திக்கு பெற்றுக் கொள்ளக் கூடிய சிறப்பான பங்களிப்பு இழக்கப்பட்டுள்ளது. ஆகவே அங்கவீனமுற்ற நபர்களைப் பொருளாதார அபிவிருத்தியின் பங்குதாரர்களாக மாற்றுவதன் மூலம் அவர்களிடம் காணப்படும் தங்கி வாழும் மனோபாவத்தை அகற்றி பயனுள்ள சமூக செயற்பாட்டாளர்களாக மாற்ற முடியும். அதன் பிரகாரம் அங்கவீனமுற்ற தொழில் தேடும் நபர்களுக்காக தனியார் துறையின் தொழில் உதவி வழங்குதலை அடிப்படையாக கொண்டு ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் ஆகியன ஒன்றிணைந்து "அங்கவீனமுற்ற சமூகத்துக்கான தொழில் உதவி மேம்பாடு" Employment Support for Persons with Disabilities - ESPD என்ற பெயரில் கருத்திட்டம் ஒன்று 2021 நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

இக்கருத்திட்டத்தின் முக்கியமான பங்காளர்களாக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA), சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் மனித வலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம் ஆகியவற்றை அறிமுகம் செய்ய முடியும் என்பதுடன் அங்கவீனமுற்ற நபர்களுக்கான செயலகம், இலங்கை வர்த்தக சம்மேளனம், இலங்கை சேவை வழங்குணர்கள் சம்மேளனம், அங்கவீனமுற்ற நபர்களின் அமைப்புக்களின் ஒன்றிணைந்த முன்னணி ஆகியவற்றை உதவி வழங்கும் ஏனைய கீக்களாக அறிமுகம் செய்ய முடியும்.

- அங்கவீனமுற்ற நபர்களை தொழிலில் ஈடுபடுத்தலை மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்றை தயாரித்தல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கு தொழில் உதவிகளை வழங்குவதற்கான அரச பொறிமுறை, தொடர்புகளை ஏற்படுத்தல் ஊடாக பலப்படுத்தல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கு தொழில் வழங்குவதற்காக தனியார் துறையினரின் பங்களிப்பை அதிகரித்தல்.

அதன் பிரகாரம் அந்த இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக ESPD கருத்திட்டம் மூலம் இலங்கையில் ஆரம்ப ஆய்வு மற்றும் முன்னோடி செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் தொழில் உதவி சேவையை நடைமுறைப்படுத்தும் ஆரம்ப கட்டமாக தொடர்புகளை ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் (Linkage Creation Program) 2022 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதன் கீழ் மாவட்ட மற்றும் பிரதேச ரீதியாக சேவையில் ஈடுபட்டுள்ள சமூக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு மாவட்ட மட்டத்தில் செயலமர்வுகளை நடாத்துதல் ஆரம்பிக்கப்பட்டது. அந்த செயலமர்வுகள் மூலம் தொடர்புகளை ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் அடிமட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய விதம் பற்றி உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2022 ஆம் ஆண்டு ESPD கருத்திட்டம் மூலம் 08 மாவட்டங்களில் (கொழும்பு, கம்பஹ, குருநாகல், களுத்துரை, கண்டி, கேகாலை, திருகோணமலை மட்டக்களப்பு) தொடர்புகளை ஏற்படுத்துவதற்கான செயலமர்வுகுள் மற்றும் அது தொடர்பான முன்னேற்ற மீளாய்வு செயலமர்வுகளை நடாத்துதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டு மேற் குறிப்பிடப்பட்ட மாவட்டங்களில் பல்வேறு தனியார் நிறுவனங்களில் அங்கவீனமுற்ற 17 நபர்களை வெற்றிகரமாக தொழிலில் ஈடுபடுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.4 சாதனைகள்

- **கிளிநொச்சி தொழிற் பயிற்சி நிலையத்தை திறந்து வைத்தல்**

அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்காக தமிழ் மொழி மூலம் தொழிற் பயிற்சி வழங்குதலை நோக்கமாக கொண்டு நிர்மாணிக்கப்பட்ட கிளிநொச்சி புதிய தொழிற் பயிற்சி நிறுவனம் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டதுடன் அதன் பயிற்சி நடவடிக்கைகள் 2023 முதலாவது காலாண்டில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

- **ஹம்பாந்தோட்டை மாவட்ட சிறுவர் வழிகாட்டி நிலையத்தினை ஆரம்பித்தல்.**

முன்பிள்ளைப் பருவத்திலுள்ள அங்கவீனமுற்ற பிள்ளைகளினை முன்கூட்டியே அடையாளம் காணுதல் மற்றும் அங்கவீன நிலைமையினைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கென சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் தற்போது செயலாக்கப்படும் நாவின்ன சிறுவர் வழிகாட்டி நிலையத்தினை முன்மாதிரியாகக் கொண்டு ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் முன்பிள்ளைப் பருவத்திலுள்ள அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கென்று சேவையினை வழங்குவதற்காக அம்பலாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் "சித்திஜய" என்ற பெயரில் ஹம்பாந்தோட்டை மாவட்ட சிறுவர் வழிகாட்டி நிலையம் 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டு அதன் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

- **கொட்டாவ முன் வாழ்க்கத்திறன் விருத்தி நிலையத்தை ஆரம்பித்தல்**

13-30 வயதிற்கிடைப்பட்ட வயதுப் பிரிவில் உள்ள இளைஞர் யுவதிகளை எதிர்கால வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு அனுப்புவதற்குத் தேவையான முன் ஆயத்தத்தினைச் செய்யும் நோக்குடன் நிர்மாணிக்கபட்ட கொட்டாவ **முன் வாழ்க்கத்திறன் விருத்தி** நிலையம் 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

2.5 சவால்கள்

- வெற்றிகரமாக தொழிற் பயிற்சியை நிறைவு செய்த பயிலுனர்களை செயலூக்கமான முறையில் பொருளாதாரத்துக்கு பங்களிப்புச் செய்யும் வகையில் பேண்தகு ரீதியில் தொழிலில் ஈடுபடுத்தல்
- அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளின் ஆற்ல் மற்றும் பலவீனங்களை இனம் கண்டு தனி நபர் அபிவிருத்தி திட்டம் பிரகாரம் அபிவிருத்தி செய்து சமூகமயப்படுத்தல்.
- இலங்கையில் பொதுவான கல்வி, தொழில் ஆகிய துறைகளில் அங்கவீனமுற்ற நபர்களுக்காக இடைத்தொடர்பு வாய்ப்புக்களை வழங்குதல் பிரயோக ரீதியாக கடினமானதாக இருத்தல்.
- நீண்டகால பாதுகாப்பு தேவைப்படும் அங்கவீனமுற்ற நபர்களுக்கான (அங்கவீனமுற்ற பிள்ளைகள், அங்கவீனமுற்ற பெண்கள், அங்கவீனமுற்ற வயதுவந்தவர்கள்) பதுகாப்பு மற்றும் அரவணைப்பை வழங்குவதற்குப் போதுமான அளவு வளங்கள் மற்றும் வசதிகள் இல்லாமை.
- வைத்தியசாலை நலன்புரி சேவைகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல் மற்றும் ஆரோக்கியமானது என்பதை உறுதி செய்தல்.

2.6 இலக்குகள்

- **றியன்சி அலகியவன்ன மகளிர் திறன் விருத்தி மற்றும் பாதுகாப்பு தேசிய நிலையத்தினை ஆரம்பித்தல்**

  இரத்தினபுரி மாவட்டத்தில் பலாங்கொடை பிரதேச செயலகப் பிரிவில் பட்டுகம்மன பிரதேசத்தின் "றியன்சி அலகியவன்ன வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்" என முன்னெடுக்கப்பட்டு வந்த நிறுவனம், சமூக சேவைகள் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டு அங்கவீனமுற்ற பெண்களுக்கு பாதுகாப்பு வழங்கும் நிலையமாக நடாத்திச் செல்வதற்குத் தேவையான புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நிறுவனத்தை 2022 ஆம் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்ட போதும் அந்த ஆண்டு நிலவிய பாரிய பொருளாதார நெருக்கடி காரணமாக 2023 ஆணம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

- **அங்கவீனமுற்ற நபர்களின் தரவு முறைமை ஒன்றை தயாரித்தல்**

  சமூக சேவைகள் திணைக்களத்தின் பிரதான இலக்கு குழுவினராக அங்கவீனமுற்ற நபர்கள் காணப்படுகின்றார்கள். இந்த இலக்கு குழுவுக்கு பயனுள்ள சேவையை வழங்குவதற்காக முழு நாட்டையும் உள்ளடக்கியதாக ஆய்வு மேற்கொண்டு அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பான முறையான தரவு முறைமை ஒன்றைத் தயாரிப்பதற்கு இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

- தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்கு பயிலுனர்களை சேர்த்துக் கொள்வதற்கான தகைமை பரீட்சை தொடர்பான வழிகாட்டல் கோவை, தொழிற் பயிற்சி நிறுவனங்களின் பயிலுனர்களை அபிவிருத்தி செய்வதற்கான தன்நபர் அபிவிருத்தி வழிகாட்டல் கோவை, திசையமைவு நிகழ்ச்சித்திட்ட வழிகாட்டல் கோவை என்ற பெயரில் 03 வழிகாட்டல் கோவைகளை அறிமுகம் செய்தல்.

- தொழிற் பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த பயிலுனர்களுக்காக சுயதொழில் முயற்சியை ஆரம்பிப்பதற்கான தொழில் முயற்சித் திட்டம் தயாரித்தல்.

- தொழிற் பயிற்சியை பூர்த்தி செய்யும் தருவாயில் உள்ள பயிலுனர்களுக்காக அரச/ தனியார் துறையுடன் தொடர்பு கொள்வதன் ஊடாக சேவைக் கால பயிற்சி வழங்குதல்.

- தொழிற் பயிற்சியை பூர்த்தி செய்த பயிலுனர்களை தொழிலில் ஈடுபடுத்துவதற்காக அரச / தனியார் நிறுவனங்கள் / அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புடன் தொழில் சந்தையினை நடாத்துதல்.
- அங்கவீனமுற்ற 100 நபர்களுக்கு தொழில் வாய்ப்பினை வழங்குவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல் மற்றும் வழிகாட்டலை வழங்குதல்.

சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் உள்ள சிறுவர் வழிகாட்டல் நிலையங்கள், ஆரம்ப தொழிற் திறமை அபிவிருத்தி நிலையங்கள், தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் அரவணைப்பு நிலையங்கள் ஊடாக அங்கவீனமுற்ற சிறுவர்கள் மற்றும் வயது வந்தவர்களுக்காக வழங்கப்படும் சேவைகளை சமூக சேவை வலையமைப்பாக நாடு பூராகவும் முன்னெடுத்தல்.

.....
கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:- அனோஜா ஹேரத்
பதவி:- சமூக சேவைகள் பணிப்பாளர்
திகதி:- 2023

அத்தியாயம் 03

வருடத்தின் ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை கூற்று

3.1 நிதிச் செயலாற்றுகை கூற்று

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த காலப் பிரிவுக்கான நிதிச் செயலாற்றுகை கூற்று

ஏசீஏ-எவ் ரூ.

பாதீடு		குறிப்பு	உண்மை நிலை		
			2022	2021	
	வருமானப் பெறுகைகள்			-	
	வருமான வரி	1	-	-	ஏசீஏ-1
	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	
	சர்வதேச வர்த்தகம் மீதான வரி	3	-	-	
	வரியல்லாத வருமானங்களும் மற்றும் ஏனையவையும்	4		-	
	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)			-	
	வருமானமல்லாத பெறுகைகள்			-	
	திறைசேரிக் கட்டுநிதி		379,023,000	340,843,000	ஏசீஏ- 3
	வைப்புக்கள்		4,114,054	1,169486	ஏசீஏ- 4
	முற்பணக் கணக்குகள்		21,894,336	19,227,401	ஏசீஏ- 5
	ஏனைய பெறுகைகள்			-	
	மொத்த வருமானமல்லாத பெறுகைகள் (ஆ)		**405,031,389**	**361,239,887**	
	மொத்த வருமானப் பெறுகைகளும் மற்றும் வருமானமல்லாத பெறுகைகளும் (ஆ)+(அ)= (இ)		**405,031,389**	**361,239,887**	
	தேறிய வருமானம் பெறுதல் மற்றும் வருமானமல்லாத பெறுகை		**405,031,389**	**361,239,887**	
	கழி: செலவு				
	மீண்டுவரும் செலவினங்கள்		-	-	
544,455,000	ஊதியங்கள், சம்பளம் மற்றும் பிற ஊழியர் பயன்கள்	5	533,372,646	428,219,961	ஏசீஏ-2(ii)
174,374,200	ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்	6	166,545,814	144,272,394	
67,350,000	நிவாரண உதவி, மானியங்கள் மற்றும் மாற்றல்கள்	7	58,909,001	51,605,679	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
70,800	பிற மீண்டுவரும் செலவினங்கள்	9	70,800	65,806	
	மொத்த மீண்டுவரும் செலவினங்கள் (ஈ)		**758,898,260**	**624,163,840**	

	மூலதனச் செலவு				
12,050,000	மூலதனச் சொத்துக்களினைப் புனரமைப்பதும் மற்றும் மேம்படுத்துவதும்	10	5,152,296	8,134,511	ஏசீஏ 2(ii)
1,700,000	மூலதனச் சொத்துக்களினைக் கையகப்படுத்துதல்	11	4,157,722	58,498,925	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	
-	நிதிச் சொத்துக்களினைக் கையகப்படுத்துதல்	13	-	-	
1,500,000	திறன் விருத்தி	14	645,201	1,238,180	
10,500,000	பிற மூலதனச் செலவுகள்	15	6,538,513	9,095,352	
	மொத்த மூலதனச் செலவு (உ)		**16,493,732**	**76,966,968**	
	பிரதான பேரேட்டுச் செலவினம் (ஊ)				
	வைப்புக் கொடுப்பனவுகள்		158,125	1,219,486	
	முற்பணக் கொடுப்பனவுகள்		21,999,361	24,601,679	எசீஎ- 4
	பிரதான பேரேட்டு செலவினம் (ஊ)		22,157,486	25,821,165	எசீஎ 5
	மொத்தச் செலவினம் (எ) = (ஈ+உ+ஊ)		797,549,479	726,951,974	
-	**திசம்பர் 31 ஆந் திகதி உள்ளவாறான மீதி ஏ = (இ-எ)**		**(392,518,089)**	**(365,712,087)**	
	சமரச அறிக்கயின்படி இருப்பு		**(392,518,089)**	**(365,712,087)**	ஏசீஏ 7
	திசம்பர் 31 ஆந் திகதி நிலவைத் தொகை		**-**	**-**	ஏசீஏ 3
			(392,518,089)	**(365,712,087)**	

3.2 நிதி நிலைமைக் கூற்று

ஏசீஏ - பீ

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு		உண்மைநிலை	
			2022 ரூ.	2021 ரூ.
நிதியல்லாத சொத்துக்கள்				
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ 6		606,881,557	486,304,191
நிதிச் சொத்துக்கள்				
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ 5		58,215,252	58,110,226
காசும் மற்றும் காசுச் சமன்பாடும்	ஏசீஏ 3			
மொத்தச் சொத்துக்கள்			**665,096,809**	**544,414,417**
தேறிய சொத்துக்கள்/உரிமைப் பங்கு				
தேறிய சொத்துக்கள்			54,234,323	58,085,226
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்			606,881,557	486,304,191
நடைமுறைப் பொறுப்புக்கள்				
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ 4		3,980,929	25,000
கட்டுநிதி மீதி	ஏசீஏ 3			
மொத்தப் பொறுப்புக்கள்			**665,096,809**	**544,414,417**

பக்க இலக்கம் 39 தொடக்கம் 41 வரை காட்டும் மேற்குறிப்பிட்ட ஏசீஏ 1 தொடக்கம் 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புக்களின் பக்க இலக்கம் 42 தொடக்கம் 44 வரை உள்ளடங்கியுள்ள கணக்குக் குறிப்புக்களின் விவரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புக்கள் மற்றும் ஏனைய கணக்குகத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுபடுத்துகிறோம்.

.....
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: யமுனா பெரேரா
பதவி: செயலாளர்
திகதி:2023

.....
கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர் :அனோஜா ஹேரத்
பதவி:சமூக சேவைகள் பணிப்பாளர்
திகதி:2023

.....
பெயர்:ஜே.ஆர்.தெனவக
பதவி:ஜரதான கணக்காளர்
திகதி:2023

3.3 காசுப் பாய்ச்சல் தொடர்பிலான கூற்று

ஏசீஏ - சீ

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மைநிலை	
	2022 ரூ.	2021 ரூ.
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	11,491,634	10,785,902
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	379,023,000	340,843,000
முற்பணங்களை அறவிடல்	23,853,326	19,756,746
வைப்புக்களின் பெறுகை	4,114,054	1,169,486
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**418,482,014**	**372,555,134**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	349,691,266	294,472,253
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	34,422,290	39,145,670
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	8,171,856	1,322,412
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட கட்டுநிதி	-	-
முற்பணக் கொடுப்பனவு	21,970,230	24,143,239
வைப்புக் கொடுப்பனவு	158,125	1,219,486
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**414,413,767**	**360,303,060**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**4,068,247**	**12,252,073**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்	-	-
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொளதீக சொத்துக்களின் விற்பனை		
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முற்பண அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு		

கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:	-	-
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	**4,068,247**	**12,252,073**
முற்பண செலுத்துகைகள்		
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (இ)	**4,068,247**	**12,252,073**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்	**(4,068,247)**	**(12,252,073)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்	**(0)**	**(0)**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்		
வெளிநாட்டுக் கடன்கள்		
பெற்ற நன்கொடைகள்	-	-
வைப்பு பெறுவனவுகள்		
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:		
உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வைப்பு கொடுப்பவனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகள் மூலம் உருவாக்கப்பட்ட காசுப்பாய்ச்சல்	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	**(0)**	**(0)**
ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி		
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி		

3.4 நிதிக் கூற்றுக் குறிப்பு - தொடர்பற்றது

3.5 வருமானச் சேகரிப்பு செலாற்றுகை - தொடர்பற்றது

3.6 ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளினைப் பயன்படுத்துவதன் செயற்திறன்

ரூ. ,000

ஒதுக்கீடுகளின் வகை	ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள்		உண்மையான செலவு	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள், முடிக்கப்பட்ட இறுதி ஒதுக்கீடுகளின் % மாக
	ஆரம்ப ஒதுக்கீடுகள்	இறுதி ஒதுக்கீடுகள்		
மீண்டுவரும்	786,500	786,250	758,898	96.5%
மூலதனம்	39,000	39,250	16,494	42.0%

3.7 நி.பி. 208 இன் பிரகாரம், பிற அமைச்சுக்கள்/திணைக்களங்களின் முகவர் ஒருவராக இத் இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள் - தொடர்பற்றது

3.8 நிதியல்லாத சொத்துக்களினை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை

ரூ. ,000

சொத்துக் குறியீடு	குறியீட்டு விவரம்	31.12.2022 ஆந் திகதிய திறைசேரி ஆய்வு அறிக்கையின் பிரகாரம் மீதி	31.12.2022 ஆந் திகதிய நிதி நிலவர அறிக்கையின் பிரகாரம் மீதி	எதிர்வரும் காலத்தில் கணக்கிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள	முன்னேற்றம் % ஆக அறிக்கையிடுதல்
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்புக்கள்	-	443,997	-	-
9152	எந்திரங்கள்	-	146,765	-	-
9153	காணிகள்	-	16,100	-	-
9154	தொட்டுணர முடியாத சொத்துக்கள்	-	19,800	-	-
9155	உயிரியில் சொத்துக்கள்	-	-	-	-
9160	நடந்து கொண்டிருக்கும் பணி	-	-	-	-
9180	குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள்	-	-	-	-

3.9 கணக்காய்வாளர் அறிக்கை

கணக்கீட்டு அலுவலர்
சமூக சேவைகள் திணைக்களம்

தலைப்பு: 216 சமூக சேவைகள் திணைக்களத்தின் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தொகுக்கப்பட்ட அறிக்கை.

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு: 216, சமூக சேவைகள் திணைக்களத்தின் 2022 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை உள்ளடக்கிய 2022 டிசம்பர் 31 ல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கைச் சனநாயக சோஷலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சமூக சேவைகள் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்படும் இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரகாரம் கணக்கீட்டு அலுவலருக்கு வருடாந்தம் விவரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இலங்கைச் சனநாயக சோஷலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 10 பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் அறிக்கை உரிய நேரத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தி வரையான தாக்கங்கள் தவிர, 2022 டிசம்பர் 31ல் உள்ளவாறான சமூக சேவைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிச் செயலாற்றுகை, காசுப்பாய்ச்சல் ஆகியன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்கள் எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படையினை வழங்குகிறது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) அமைவாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு ஆகிய பிரிவுகளில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துக்கான அடிப்படையினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சியங்கள் போதுமானதும் பொருத்தமானதும் ஆகும் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைவாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் உண்மையானதும் நியாமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தல் மற்றும்

மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு ஆகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்தம் மற்றும் நடைமுறை நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க முடியுமானவாறு தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக மிகவும் பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று பேணப்பட்டு வருவதாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதி செய்யப்பட வேண்டியதுடன் அம் முறைமையின் வினைத்திறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வுகளை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையினை பயனுள்ள விதத்தில் கொண்டு நடாத்துவதற்குத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஓட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அளவு ரீதியான பொய்யான கூற்றுக்கள் அற்றவை என நியாயமான ஓர் உறுதிப்பாட்டினை வழங்குதல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தொகுக்கப்பட்ட அறிக்கையினை வெளியிடல் எனது நோக்கம் ஆகும். நியாயமான உறுதிப்பாடு உயர்வான தரத்தினைக் கொண்ட ஓர் உறுதிப்பாடாக அமைகின்ற போதும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்ற உறுதிப்பாடாக அமைய மாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டு விளைவின் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக் கூடும் என்பதுடன் இந் நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அதனைப் பயன்படுத்துபவர்களினால் பொருளாதாரத் தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் சந்தேகக் கண்ணோட்டத்தில் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் அபாயங்களை அடையாளம் காணும் போது மற்றும் மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அபாயத்தினைக் குறைப்பதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சாட்சியங்களைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாக உள்ளது. பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினை விடவும் மோசடி காரணமாக பாரிய தாக்கம் ஏற்படும் என்பதுடன் தவறான செயற்பாடு, போலி ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்றே வழிவிடுதல், அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை வழிவிடுதல் ஆகியன மோசடிகள் நிகழ்வதற்கான காரணங்கள் ஆகும்.

- சந்தர்ப்பத்திற்கு ஏற்ற கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக மாவட்ட செயலக உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில் கொள்ளவில்லை

- வெளிக்கொணர்தல்கள் உள்ளடங்கிய நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாய் அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமானவாறு நிதிக் கூற்றுக்களில் உள்ளக்கப்பட்டுள்ளதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாய் அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமானவாறு உள்ளக்கப்பட்டுள்ளதென,

எனது கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவூட்டப்பட்டது.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் ஒத்திசைவாக உள்ளதெனவும்,

(ஆ) கடந்த ஆண்டுக்கு ஏற்புடைய நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழ் குறிப்பிடப்படும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

முந்திய ஆண்டு அறிக்கை பந்தியுடனான தொடர்பு	நடைமுறைப்படுத்தப்படாத பரிந்துரைகள்	இவ் அறிக்கை பந்தியுடனான தொடர்பு
3.3) அ(	இருப்புக் கணிப்பீட்டின் போது தெரியவந்த மிகை மற்றும் குறைபாடுகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிப் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	3. 2(இ(
3.6 (உ(	காணிகளின் சட்ட ரீதியான உரிமையை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்து கட்டட நிர்மாணிப்புக்காக அரசின் ஒதுக்கீட்டை பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்	1.6.1(அ (மற்றும்)ஆ(

1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 நிதியல்லாத சொத்துக்கள்

) அ(தொழிற் பயிற்சி நிறுவனங்கள், புனர்வாழ்வு நிலையங்கள் மற்றும் வழிகாட்டல் நிலையங்களைத் தாபிப்பதற்காக திணைக்களத்துக்கு நன்கொடையாக கிடைத்த சுமார் 33 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட 05 காணிகளை நன்கெடையாக வழங்கி 10 ஆண்டுகள் கடந்துள்ள போதும் குறித்த காணிகள் மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களின் பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு காணி மற்றும் கட்டடங்களாக கணக்குகளில் பதியப்படவில்லை.

ஆ(11 தொழிற்பயிற்சி நிறுவனங்கள் தாபிக்கப்பட்டுள்ள காணிகளின் சட்ட ரீதியான உரிமையினை திணைக்களத்துக்கு கையேற்காமை மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாமை காரணமாக கடந்த 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்கள், நிதியல்லாத சொத்துக்களாக கணக்குப் பதிவு மேற்கொள்ளாது கணக்குகளில் தவறவிடப்பட்டது .

1.6.2 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் பின்வரும் ஆவணங்கள் பேணப்படவில்லை என்பதுடன் சில ஆவணங்கள் முறையாகவும் இற்றைப்படுத்தப்படாமலும் காணப்பட்டதாக மாதிரிப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

ஆவணங்களின் வகை	ஏற்புடைய ஒழுங்குவிதிகள்	அவதானிப்புக்கள்
வாகன லொக் பதிவுப் புத்தகம் (பொது 267 படிவம்)	நி.ஒ.1645(அ)	முறையாக பேணப்படவில்லை
மோட்டார் வாகன பட்டியல்	நி.ஒ.1647(உ)	முறையாக பேணப்படவில்லை
மின் உபகரணங்கள் பற்றிய ஆவணம்	நி.ஒ.454(2)	இற்றைப்படுத்தி பேணப்படவில்லை

2. நிதி மீளாய்வு

2.1 முற்பண முகாமைத்துவம்

2022 ஆம் ஆண்டு சனவரி முதல் டிசம்பர் வரையான கால எல்லைக்குள் திணைக்களத்தினால் மாதாந்தம் விண்ணப்பிக்கப்பட்ட முற்பணப் பெறுமதிகளின் மொத்தம் 477.81 மி.ரூபாவாக காணப்பட்டதுடன் திறைசேரியினால் ஆண்டில் வழங்கப்பட்ட முற்பணப் பெறுமதிகளின் மொத்தம் 379.02 மி.ரூபாவாக அமைந்தது. விண்ணப்பிக்கப்பட்ட முற்பண அளவில் 98.80 மி.ரூபாய் அதாவது விண்ணப்பிக்கப்பட்ட முற்பணத்தின் சதவீதமாக 20..67 சதவீத முற்பணங்கள் திணைக்களத்துக்கு வழங்கப்படவில்லை.

2.2 செலவு முகாமைத்துவம்

4 வகையான மீண்டெழும் செலவு விடயங்கள் தொடர்பில் வழங்கப்பட்ட மொத்தம் ரூ.41,950.000 ரூபாய் வருடாந்த மதிப்பீட்டு ஒதுக்கீட்டுத் தொகை போதுமானதாக அமையாதததன் காரணமாக ஏனைய செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூ.505,000 நி.ஒ 66/69 மாற்றல்களின் கீழ் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்ட போதும் அந்த ஒதுக்கீடுகளுள் 47 சதவீதம் முதல் 53 சதவீதம் வரை ஒதுக்கீட்டு மீதி ஏற்பட்டது. அதன் பிரகாரம் திணைக்களத்தால் மேலதிக ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்ளல் உரிய முகாமைத்துவத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படவில்லை என அவதானிக்கப்பட்டது .

2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ(இலங்கைச் சனநாயக சோஷலிச குடியரசு நிதி ஒழுங்குவிதிகள் 214 இன் ஏற்பாடுகள் பிரகாரம் அதிகாரம் வழங்கும் உத்தியோகத்தர்கள் மற்றும் அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தர்கள் பொறுப்புக்கள் பற்றிய ஆவணங்களை உரிய வேளையில் பரீட்சிக்க வேண்டிய போதும் அவ்வாறு பரீட்சிக்காமல் ஏற்புடைய பொறுப்புக்களுக்காக எதிர்வரும் ஆண்டில் கொடுப்பனவு மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் பொறுப்புக்கள் பற்றிய ஆவணத்தில் குறிப்பிடுவதற்கு திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆகவே

நி.பி. ஏற்பாடுகள் பிரகாரம் பொறுப்புக்கள் பற்றிய ஆவணங்களை பேணுவதன் மூலம் பொறுப்புக்கள் பற்றிய கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப்படவில்லை.

)ஆ(2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 02(ஈ) பந்தியின் ஏற்பாடுகள் பிரகாரம் ஏதேனும் நிதியாண்டு தொடர்பான அனைத்து பொறுப்புக்களும் அதே ஆண்டு விடுவிக்கப்பட வேண்டும் என்பதுடன் எந்தவொரு பொறுப்பும் எதிர்வரும் ஆண்டு தீர்க்கும் நோக்கில் முன்கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படக் கூடாதென அறிவுறுத்தல் வழங்கப்பட்ட போதும் அவ்வாறு செலுத்தி விடுவிக்கப்படாத 01 ஆண்டு முதல் 04 ஆண்டுகள் வரையான காலம் கடந்த 19 செலவு விடயங்கள் தொடர்பில் ரூ.5,045,397 பொறுப்புக்கள் காணப்பட்டன .

2.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் பின்வரும் விடயங்கள் தொடர்பில் சான்றுப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டி இருப்பினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

)அ(திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட்டு பேணப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டியதுடன் அந்த முறையின் விளைதிறன் தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை பயனுள்ளவாறு மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அந்த மீளாய்வுகளை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் ஒரு பிரதியினை கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்க வேண்டி இருப்பினும் அவ்வாறான ஒரு மீளாய்வு மேற்கொண்டதற்கான கூற்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

2.5 சட்டம், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகிறது.

சட்டம், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் தொடர்பு	இணங்காமை
) அ(இலங்கைச் சனநாயக சோஷலிச குடியரசு நிதி ஒழுங்குவிதிகள் 880 மற்றும் 612 ஆம் அதிகாரத்தின் கீழ் அரச அலுவலர்களின் பிணைக் கட்டளைச் சட்டம்	பிணை நிற்க வேண்டிய 40 அலுவலர்களில் 16 அலுவலர்கள் மட்டும் பிணைகளை வைப்புச் செய்துள்ளார்கள். எஞ்சிய 24 அலுவலர்களுள் பிணை வைப்புக்களை பொறுப்பேற்றலில் நீண்டகாலம் தாமதம் நிலவியது.
)ஆ(2016பெப்ரவரி 10 ஆம் திகதிய டீஎம்ஏ/எச்ரீ/2015/01 ஆம் இலக்க முகாமைத்துவப் கணக்காய்வு சுற்றறிக்கையின் 2.2 ஆம் பந்தி	திணைக்களத்தின் வாகனங்கள் தொடர்பாக மீளாய்வு ஆண்டில் மற்றும் முன்னைய 05 ஆண்டுகளில் வருடாந்த பௌதீக கணிப்பீட்டு பணிகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
)இ(2016 டிசம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக	எரிபொருள் பரிசோதனையின் பின்னர் 12 மாத காலத்துக்குப் பின்னர் அல்லது 25,000 கி.மீ செலுத்தப்பட்ட பின்னர் எந்திரத்தின் பிரதான பழுதுபார்ப்பின்

